ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு புரட்டாசி-மீ 17-உ (2—10—1932) | மலர் 23.

# நீங்கள் விரும்புவதென்ன?

## அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்கு தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

# Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட். குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்படுத்தும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.



உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.



## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி.எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஹூ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

வெல்லூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை—கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம் பருத்தித்துறை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை
4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி ராஜவீதி.



பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது

# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.


இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

# (Scientific Method and Ignorant Religious Beliefs.)

# மெஞ்ஞான முறையும், மதங்களின் மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்னை.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(10)

முந்திய அத்தியாயத்தில் மதங்களின் மூடநம்பிக்கைகளைப்பற்றி குறிப்பாக எடுத்துக்காட்டிவந்தோம். முக்கியமாக இந்து மதத்தின் கோட்பாடுகளுக்கு மூடநம்பிக்கையே ஆதாரமெனவும் குறிப்பிட்டோம். இந்துமதத்தின் முக்கிய கோட்பாடுகளாகிய (Doctrines) கடவுள்' 'ஆன்மா' மோட்சம், நரகம், பக்தி, பிரார்த்தனை, கன்மம், வினை, மறுஜென்மம் முதலிய முக்கிய சித்தாந்தங்களுக்கு நமது அனுபவத்தில் எந்த வித ஆதரவும் இல்லை எனவும் கண்டோம். இந்தச் சொற்கள் நமது முன்னோர்களாகிய காட்டுமிராண்டிகள் மூலமாக (Through our Savage ancestors) பெறப்பட்டனவென்று பூர்வ மனித நூலோர் (Anthropologists) அபிப்பிராயங்கொண்டுள்ளதையும் குறிப்பிட்டோம். மொத்தமாகவும், பொதுவாகவும் சொல்லவேண்டில் இந்த பதங்களுக்கு வெளிமுகப்பொருள்கள் யாதும் (Objects) கிடையா. 'கடவுள்' இன்னவிதப்பொருளென்று யார் சொல்லக்கூடும்? 'நரகம், மோட்சம்' எவ்வுலகில் உளதாகக் கூறலாம்? 'கன்மம்' எவ்விதமாக மனித நடவடிக்கையை நடத்துகிறதென்று தெரியக்கூடும்? மறுஜென்மமென்பதை கதைகளில் (Jataka Tales and Folk Lore) படிக்கின்றோமேயொழிய மறுஜென்மத்தைக்குறித்து எவ்வித அனுபவமும் இல்லை. ஆதலின் இந்துமதக்கோட்பாடுகள் ஒவ்வொன்றும் கற்பிதச்சொற்களென்பதற்குத் தடை என்ன?

பழக்கத்தினுலும், அச்சொற்களின் மேல் வைத்துள்ள அபிமானத்தினுலும் வழக்கச்சொற்களாக உபயோகித்து வருகின்றோம். இதைத்தவிர எந்தவித ருசுவும் [Proofs) அச்சொற்களுக்குக்கிடையா.

இரண்டாவது மதமாகிய புத்த மதக்கோட்பாடுகள் இன்னவைஎன்று எடுத்துக்காட்டி அம்மதத்திற்கு நால்களையும், அம்மதம் சிறுபாத்திரமென்றும் (Little Vehicle) பெறும் பாத்திரமென்றும் [Great Vehicle) அதாவது ஈனயானு; மகாயானு வென்று பிரிவு பட்டுள்ளதையும் காண்பித்தோம். இவ்விஷயங்களை விபரமாக தெரிந்துகொள்ள பிரியமுள்ளவர்கள் பாலி பாஷையில் (அதாவது புத்தர் பேசிய பாஷையில் [Pali Language) விற்பன்னரான ரீஸ்டேவிட்ஸ் [Rhys Davids] புத்ததருமத்தைக் குறித்து எழுதியுள்ள கிரந்தங்களை வாசிக்கலாம்.

புத்தமதம் (Buddhism by Rhys Davids S. P. C. K. Series 2sh 6ds. Early—Buddhism— ஆதி புத்தமதம் by Rhys Davids (Constable & Co.) Buddhist-India—புத்தர் இந்தியா, முதலிய நூல்களை வாசித்தறியலாம்.

எந்த மதமாயினும் அதனதன் கோட்பாடுகள் விஞ்ஞான முறைப்படி, மூடநம்பிக்கை எனவே எண்ணவேண்டும், ஏனெனில் அவைகளின் கோட்பாடுகள் விஞ்ஞான விஷயங்களைப்போல் பார்வைக்கும் பரீட்சைக்கும் இடந்தருதலை. விஞ்ஞானமுறைஎதோ அபூர்வமுறை என எண்ணலாகாது. இதன் முக்கியகருத்துஎன்னவெனில் எந்த சம்பவமாயினும் நமது அனுபவத்திற்கே பொருந்தியும் உட்பட்டும் இருக்கவேண்டும். நமக்குத் தெரிந்தகாரணங்களைக்கொண்டு அறியும்வரை வேறெந்த காரணத்தையும் கருதலாகா. திருஷ்டாந்தமாக 'பேய்பிடித்த விட்டின்' சம்பவமொன்றை எடுத்துக்கொள்ளுவோம். பாதி இரவில் ஒரு சப்தம் கேட்டதாக இருக்கட்டும். இந்த சப்தம் யாரால் செய்து இருக்கக் கூடும்? சாதாரணமாக காற்றால் சப்தம் உண்டாய் இருக்கலாம் அல்லது மனிதர்களால் உண்டாயிருக்கலாம், அல்லது எதாகிலும் சாமான் விழுந்தால் அதனால் உண்டாயிருக்கலாம். அல்லது சப்தம் கேட்டதுபோல் எண்ணியுமிருக்கலாம். அல்லது காதின் பலவீனத்தால் சப்தத்தைக் கேட்ட மாதிரியாய் இருக்கலாம். இத்தியாதி காரணங்களால் சப்தமென்ற சம்பவம் உண்டாவது சகஜம். இந்தக்காரணங்களைத்தேடி அறிந்துகொள்ளும்வரை வேறு எந்த காரணத்தையும் குறிப்பிடுவது ஞாயமானதாகா. மேற்குறித்த காரணங்களால் உண்டாகவில்லை அந்த சப்தம் என்று முடிவுகட்டினுலும், சாதாரண அனுபவத்திற்கு மாறான அல்லது அதீதமான [Strange) காரணங்களைக் குறிப்பிடுவதும் ஞாயமாகா. உலகில் நடக்கும் ஆயிரம் சம்பவங்களில் 999 சம்பவங்கள் சாதாரண காரணங்களால் நடக்கின்றதென்பது நமது அனுபவம். நமக்குப்போதுமான சந்தர்ப்பங்கள் கிடைக்காமையாலோ அல்லது சோம்பேரித்தனத்தினுலோ, அல்லது பொய் நம்பிக்கையின்மேல் வைத்துள்ள பக்தியாலோ ஒரு சம்பவத்தின் காரணத்தைதெரிந்து கொள்ள முடியாமல் போகும். அந்த அவசரத்தில் அதீதமான காரணத்தை உற்பத்தி செய்துகொள்கின்றோம். சப்தம் உண்டான காரணம் தெரியாதபடியால் பழக்க வாசனையால் அந்த சப்தம் தெய்வத்தாலோ, பேயாலோ, பிசாசாலோ, உண்டாயிற்றென்று தீர்மானிக்கின்றோம். இதுதான் நாம் விசாரிக்காமல் செய்யும் தீர்மானங்களென அறிக. இவ்வித அவசர தீர்மானங்களால் உலகில் பூதம், பேய், பிசாசு, கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், கன்மம், நிர்வாணம் இவைகளை சிருஷ்டி செய்துவிடுகின்றோம். காற்று மழை எப்படி உண்டாயிற்று என்றகாரணத்தைத் தெரியாதவரை மாருதியும், இந்திரனும்காற்றையும், மழையையும் உண்டாக்கினதாக எண்ணி வந்தார்கள். ஆனால்மெஞ்ஞான ஆராய்ச்சியால் காற்றும் மழையும் பூதபௌதிக காரணங்களால் உண்டானதாக தெரிந்துகொண்டபிறகு மாருதியும், வருணனும் கற்பனை சொற்களாக தீர்மானிக்கப்பட்டன. அதுபோலவே பேய்பிடித்த வீடுகளென்று (Haunted House) அதில் நடந்த சில சம்பவங்களைக்கொண்டு அவசரத்தில் தீர்மானித்தார்கள் ஆனால் ஆராய்ச்சியால் பேய்பிடித்த வீடு என்பதும், பிசாசுபிடித்த வீடு என்பதும் பொய்யென்று கருதப்படநேர்ந்தது. பேய்பிடித்த வீடுகளென்று சொல்லிவந்த இடங்களெல்லாம் 1000-க்கு 999பதுகளை பேயும் பிடிக்கவுமில்லை, பிசாசும் பிடிக்கவில்லை என்று கருதப்படுகின்றன. எங்கேயோ ஒரு வீட்டில் நடந்த சம்பவத்தின் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அதனுலேயே பேய் பிடித்த சம்பவம் உண்மையென தீர்மானிக்கலாகாது.

இந்த ஞாயங்களை புத்த மதகோட்பாடுகளைக்குறித்து உபயோகிப்பாம்.

கர்மம் என்ற சொல்லை விசாரிப்போம். கர்மம் என்ருல் செய்கை. கையாலும், காலாலும், தேக உருப்புகளாலும் செய்யும் வேலைகளை கர்மம் என்று சொல்லவேண்டும். நாம் செய்யும் செய்கைகள் போலவே மரங்களும், மற்ற சிலர்களும் கர்மத்தைச் செய்கின்றன. ஆனுல் மரத்தின் கன்மம், பட்சிகளின் கன்மம், நாய், நரி முதலிய மிருகங்களின் கன்மம் என்று சொல்வதில்லையே எந்த நடத்தைக்கு ஈடாக எந்த பலன் கிடைக்கின்றதென்று சொல்லக்கூடும்? இந்த ஜன்மத்தில் நாம் செய்யுங்காரியங்களுக்கெல்லாம் தக்கபடி என்ன பலன் கிடைப்பதென்பது என்ன நிச்சயம்? சிலதிற்கு பலன்கிடைக்கின்றது. சிலதிற்கு ல்லை. கிடைத்தாலும் உழைப்புக்குத்தகுந்த பலன் கிடைப்பதில்லை. ஆதலின் கன்மத்திற்கு தகுந்தபடி அனுபவிப்பான் என்பதில் என்ன அர்த்தம்? இவ்வுலகில் நீதி என்பதும் நெறி என்பதும் அந்தந்த ஜனசமூக வாழ்க்கையில் அந்தந்த அவசரத்திற்குத்தக்கபடி உண்டானவை. திருஷ்டாந்தமாக கொலை செய்வது பாதகமென்று பஞ்ச சீலத்திலும் பத்து கட்டளையிலும் படிக்கின்றோம் இதை துர்கருமம் என்று சொல்கின்றோம்! ஆனுல் சண்டையில் (போரில்) கொன்ருல் நற்கருமமென்று கொலை செய்தவனை துதிக்கின்றோம்! ஆதலின் 'கொலை' என்பதை கெட்டதென்பதும், நல்லதென்பதும் அந்தந்த அவசரத்திற்கேற்க ஏர்ப்பட்ட குணங்களேயொழிய அதை நற்கருமமென்பதும், அல்லது துற்கருமமென்பதும் கருமத்திற்குத் தக்கவாறு பயன் கிடைப்பதென்பதும் பொருத்தமில்லாத சொற்களேயாகும்.

கன்மம் என்ற சொல் எப்படி புத்த மதத்தில் நுழைந்ததை சற்று விசாரிப்போம் 'கன்மம்' (Karma) என்பது இந்து மதத்தின் புராதன சொல்லாகும். இந்த சொல்லின் விஷயமாக இந்துக்கள் செய்துள்ள கற்பனை என்னவெனில் மனிதனுக்குள் ஒரு 'ஆன்மா' வுண்டு, அந்த ஆன்மா இந்த ஜன்மத்தில் செய்துவரும் நற்கருமத்தையோ, துர்கருமத்தையோ பின் ஜன்மத்தில் அனுபவிக்கின்றது. அந்தந்த ஆன்மாக்களின் வினைக்கீடாக மறுஜன்மத்தில் பலன் அனுபவிக்கவேண்டும் இந்த ஜன்மத்தில் ஆன்மாக்களுக்குள்ள வித்தியாசம், முன்ஜன்மத்தில் செய்த வினைப்பயனுகும் என்று கதை கட்டினூர்கள். இந்தக்கதையை, புத்தர்களும் தங்கள் மத சித்தாந்தமாக்கிக்கொண்டார்கள். ஆனுல் புத்தர்கள் அனுத்மவாதிகளாதலால், அதாவது ஆத்மா இல்லை என்று சொல்லுகின்றவர்களாதலால் ஆத்மா இல்லாமலே கன்மம் ஒரு ஜன்மத்திலிருந்து மற்றோர் ஜன்மத்திற்கு பலன் அளிப்பதாக உத்தேசி

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

## டாக்டர்

# அம்பெத்கார் வெற்றி.

## காந்தியார் பணிவு.

## ஒப்பந்த விபரம்.

முதலில் பம்பாயிலும், பிறகு புனாவிலும் நடைபெற்ற உயர்ஜாதி ஹிந்துக்கள் தாழ்த்தப்பட்டார் ஆகியோரின் மகாநாட்டின் பயனாகவும், மகாத்மாவுடன் கலந்தாலோசித்ததன் பயனாகவும் உயர் ஜாதி ஹிந்துக்களும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையில் சட்ட சபைத்தேர்தல் முறை சம்பந்தமாய் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அந்த ஒப்பந்தவிபரம் பின்வருமாறு:—

சட்ட சபைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்வ சம்மந்தமாயும், மற்றும் அவர்களின் க்ஷேமத்தைப்பொறுத்த விஷயங்களைப்பற்றியும் தாழ்த்தப்பட்டவகுப்பினருக்கும் இதர ஹிந்து சமூகத்தினருக்கும் கீழ்க்கண்ட விபரப்படி ஸ்தானங்களை ரிசர்வ்செய்ய வேண்டும்:—

| | |
|---|---|
| சென்னை | 30 |
| பம்பாய், சிந்து | 15 |
| பாஞ்சாலம் | 8 |
| பீகார், ஒரிசா | 18 |
| மத்திய மண்டலம் | 20 |
| அசாம் | 7 |
| வங்காளம் | 30 |
| ஐக்கிய மண்டலம் | 20 |
| மொத்தம் | 148 |

பிரதம மந்திரியின் தீர்ப்பில் மாகாண சட்டசபை மொத்த ஸ்தானங்களைப்பற்றி அறிவித்துள்ள எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டே பிரஸ்தாப ஸ்தாபனங்கள் நிர்ணயிக்கப்பெற்றுள்ளன.

### தேர்தல் முறை.

2. கீழ்க்கண்ட முறைப்படி கூட்டுத்தொகுதி மூலமே மேற்கண்ட ரிசர்வ் ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடைபெறும், ரிசர்வ்செய்யப்பெற்ற ஒவ்வொரு ஸ்தானத்திற்கும், பூர்வாங்கதேர்தலொன்று நடைபெறும். பொது வாக்காளர் ஜாபிதாவிலடங்கியுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு ஓட்டர்கள்மட்டும் இப் பூர்வாங்கதேர்தலில் கலந்து கொள்வர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த 4 அபேட்சகர்களை முதலில் தனி ஓட்டுகள் மூலம் அவர்கள் தேர்ந்தெடுப்பர்.

அவ்விதம் அதிக ஓட்டுகள்பெற்று தேர்ந்தெடுக்கப்பெற்ற 4 பேர்களும் ரிசர்வ் ஸ்தானத்திற்குப் பொதுத்தொகுதி அபேட்சகர்களாக நிற்பர்.

### இந்தியா சட்டசபை.

3. இந்தியா சட்டசபைக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இவ்விதமே கூட்டுத்தொகுதிமூலம் பிரதிநிதித்துவமளிக்க வேண்டும். 2-வது செக்ஷனில் குறிப்பிட்டுள்ள முறைப்படி, ஸ்தானங்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ரிசர்வ்செய்து பூர்வாங்க தேர்தலையும் நடத்தவேண்டும்.

4. இந்தியா சட்டசபையில், பொதுத்தொகுதிக்கு ஏற்படுத்தும் ஸ்தானங்களுக்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு-18% ஸ்தானங்களை ரிசர்வ் செய்ய வேண்டும்.

5. இந்தியாசட்டசபை, மாகாண சட்டசபை இவைகளுக்கு பூர்வாங்க தேர்தல் நடத்தும் முறை, முதல் 10 வருஷங்களுக்குப்பின் தானாகவே ரத்தாகிவிடவேண்டும். ஆனால், கீழ்க்கண்ட 6-வது செக்ஷன்படி அக்காலத்திற்கு முன்பே ஓர் பரஸ்பர ஒப்பந்தம் ஏற்பட்டு விடுமாகில், அக்காலத்திற்கு முன்பேயே இம்முறையை ரத்துசெய்து கொள்ளலாம்.

6. இவ்வொப்பந்தத்தின் 1, 4 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்தியா சட்டசபையிலும், மாகாண சட்டசபைகளிலும் ஸ்தானங்களை ரிசர்வ்செய்யும் முறை, இவ்வொப்பந்தம் அமுலிலுள்ளவரை நீடித்திருக்கும்.

7. மாகாண, இந்தியா சட்டசபைகளுக்கு, தாழ்த்தப்பட்டோரின் வாக்குரிமை லோதியன் கமிட்டி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியே இருத்தல் வேண்டும்.

8. ஸ்தல ஸ்தாபன தேர்தலுக்கோ, அன்றி சர்க்கார் உத்தியோகங்கள் பெறுவதற்கோ, தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவரென்ற காரணத்திற்காக எவருக்கும் எவ்வித அசௌகரியங்களுமிருக்கக் கூடாது. சர்க்கார் உத்தியோகங்கள்பெற நிர்ணயிக்கபடும் கல்வி யோக்கியதாம்சங்கள் பெற்றிருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர்களுக்கு நேர்மையான முறையில் உத்தியோகங்களளிக்க சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

9. ஒவ்வொரு மாகாண கல்வி கிராண்ட் நிதியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி சௌகரியங்களளிக்க போதிய தொகையை ஒதுக்கி வைக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தில் புனாவில் விஜயம் செய்துள்ள பண்டித மதன் மோகன மாளவியா, டாக்டர் அம்பேத்கார், டாக்டர் சோலங்கி, ராவ் பகதூர் சினிவாசன், சர். தேஜ்பகதூர் சாப்ரூ, ஸ்ரீ. ஜெயக்கார், ராவ்பகதூர் எம். சி. ராஜ, ஸ்ரீ. பி. பாலு, ஸ்ரீ ராஜபோஜ் ஸ்ரீமான்கள். சிவராஜ், பிர்லா, எம். பிள்ளை சர். சி. பி. மேத்தா, கவாய் தியோதார், சி. ராஜகோபாலாச்சாரி, ராஜேந்திரபிரசாத், பகேல் முதலியவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் நிறைவேறியதைப்பற்றிய விவரம் முழுதும் இந்தியா சர்க்கார்மூலம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உடனே அனுப்பப்பட்டது. பற்பல தலைவர்களும் மகாத்மாவின் தேக நிலையை யொட்டி பிரிட்டிஷ் சாக்கார் இவ்விஷயத்தில் உடனே முடிவுக்கு வரவேண்டுமென வற்புறுத்தித்தெரிவித்தனர், உயர்ஜாதி ஹிந்துக்கள், தாழ்த்தப்பட்டார் பிரதிநிதிகளடங்கிய மகாநாடு மீண்டும் 25-தேதி பம்பாயில் கூடி ஒப்பந்தத்தை நிறைவேற்றினர். அப்போது மாளவியா, டாக்டர் அம்பேத்கார் முதலியவர்கள் பேசினார்கள். தீண்டாமை விலக்கு சம்பந்தமாய் இதர ஹிந்துக்களுக்குள்ள சகல உரிமைகளும் தீண்டாதாரென்போரும் பெறவேண்டு மென்றும், இந்த உரிமைகள் சட்டப்பூர்வமாக அங்கீகாரத்தைப் பெறவேண்டு மென்றும், இப்போது பெருவிட்டாலும் சுயராஜ்ய பார்லிமெண்டில் இதுதான் முதல்வேலையென்றும், தீண்டாமை விலக்குக் கமிட்டி ஏற்படுத்தி 12 லட்சம் நிதியுடன் வேலைசெய்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

---

## ஆதிதிராவிட மகாஜன சபைக் கூட்டம்.

### நிறைவேறிய தீர்மானங்கள்

கோயமுத்தூர் ஆதிதிராவிட மகாஜனசபையின் ஆதரவில்கடந்தசெவ்வாய்க்கிழமை 20—9—32உ கோயமுத்தூரில், ஒரு கூட்டம் நடைபெற்றது. மாஜி சட்டசபை அங்கத்தினர் திரு. ஆர். வீரையன் அக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டன.

1. ஜனத் தொகைக்குத்தக்கவாறு கொடுக்கப்பட வேண்டிய ஸ்தானங்களுக்குக் குறையாமல் உள்ள ஸ்தானங்களோடு கூட்டுத்தொகுதி கொடுக்கப்படலா மென்றும். ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கும், தாங்கள் போட்டிபோட சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்றும் இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

2. தீண்டாமையை அல்லது ஜாதிப் பிரிவுகளை வேரோடு நீக்குவதற்காவும், இப்போது மகாநாட்டில் தாழ்த்தப்பட்டார்களென்று கூறப்படுபவர்களுக்கு எதிரிடையாக நிலவி வரும் சமய ஏற்றத்தாழ்வுகளை நீக்குதவற்காகவும் பலவழிகளையும், பல முறைகளையும் கண்டு பிடிக்கும்படி இவ்வாதிதிராவிடக்கூட்டம் ஜாதி இந்துக்களை வேண்டிக் கொள்ளுகிறது.

---

## பார்ப்பனரல்லாத தொண்டர்களே!

### தஞ்சை மகாநாட்டுக்குப் புறப்படுங்கள்.

(பண்டிதர். திருஞானசம்பந்தர்.)

சகோதரர்களே!

நமது மாபெருந்தலைவர்களாகிய டாக்டர், நாயர், சர். பி. தியாகராயர், பனகல் அரசர் முதலிய தலைவர்களால் ஸ்தாபித்து வளர்க்கப்பட்ட நமது பார்ப்பனரல்லாதாரின் மாகாண மகாநாடு அக்டோபர், 8, 9, ல் தஞ்சையில் நடை பெறப்போகிறது. இம்மகாநாடு தற்போது பல அவசியமான காரணங்களை முன்னிட்டு கூட்டப்படுகிறது. இதில், புதிய தலைவர் தேர்தலும், பலமுக்கியமான தீர்மானங்களும் வரப்போகிறபடியால் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாத தொண்டர்களும், தலைவர்களும் அவசியம் தஞ்சைமகாநாட்டுக்குப் புறப்படுங்கள். மகாநாட்டிற்குச் சென்று தகுந்த தலைவரையும், தக்க தீர்மானங்களையும் நிறைவேற்றுங்கள்.

தவறினால் நமது கட்சிக்கு பலங்குன்றும் என்பதில் தடையில்லை. ஆதலால், உடனே தஞ்சைக்குப் புறப்படுங்கள்.

---

## கூட்டம்.

8—10—32 சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மேல் கோலார் தங்கவயல் மாரிகுப்பம் தென்னிந்தியா பௌத்த சங்க சபா மண்டபத்தில் திருவாளர் ஜி. அப்பாதுரையார் தலைமையின்கீழ் பிரசங்கமாரி பொழியப்படும் அக்கால் திருவாளர்கள் திருவாளிகள் வரும்படியாய்க், கேட்டுக் கொள்ளுகிறேன் என கௌரவ காரியதரிசியார் எழுதுகிறார்.

---

## மதுரை சுயமரியாதை சங்கம்.

18-9-32உ மாலை 6-30மணிக்கு சங்க மாடியில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமயம் டாக்டர் எஸ். ஜீ. தஸ்தஹீர் அவர்கள் தலைமையின் கீழ் "பொது ஜனசேவை" என்பது பற்றி தோழர்களான திருப்பத்தூர் சுல்தான்பக்தாதி, வக்கீல் டி. நாராயணன், ஸ்ரீவில்லிபுத்தூர் முத்துச்சாமி, எ. எஸ். அருணசலம் முதலியவர்கள் பொதுஜனங்களுக்கு காங்கிரஸ் செய்த சேவையைப்பற்றியும், நம்மியக்கம் செய்தவைகளைப்பற்றியும் மிகவும் தெளிவாக பேசினார்கள். இடை இடையே தோழர் ரத்தினம் அவர்கள் இனிய சுயமரியாதைக்கீதம் பாடி பரவசப்படுத்தினர். தலைவாமுடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிந்தது. (ஒரு நிருபர்)

# “சமதர்ம முரசு”

“எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்,, என்னும் நியதி நிலைக்கவேண்டுமாகுல்.........?

## கல்வித்திட்டம் எவ்வாறு கடைப்பிடிக்கப்படல் வேண்டும்?

(தோழர் A. இரத்தினசபாபதி)

(7)

“எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்னும் உயரிய கொள்கையின் உண்மை ஒருநாட்டில் ஊன்றித்தழைக்கவேண்டுமாயின், அந்நாட்டில் வகுக்கப்படும் திட்டங்கள் எவ்வாறிருத்தல் வேண்டுமென்பது இப்போதைய கேள்வி.

மனித சமூகத்தில் தோன்றிய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மனிதர்களுக்குள்ள எல்லா உரிமைகளையும் பெற்று எல்லோரும் “சரிநிகர் சமம்” என்னும் நேர்மைநியதியின்படி இன்புற்றுவாழ்தல் மனிதரது உரிமையும் கடமையுமாகுமென்பதை, கடந்த ஆறுகட்டுரைகளிலும் விளக்கிவலியுறுத்தினேம். இவற்றிற்கிடையில், “சமதர்மஉலகில் பெண்டிர் சமூகத்தின் நிலைமை எவ்வாறிருக்குமெனப்பலர் நம்மை வினவுகிறார்கள். அவ்வன்பர்கள், நமது கடந்த கட்டுரைகளில் கேட்கக்கிடைக்கும் சமதர்மமுரசின் ஒலியை நன்கு கிரகித்துக்கொள்ளின், இக்கேள்விக்கு விடை அவற்றிலேயே மிளிர்வதை நன்குகாணப்பெறலாம்! நாம் அவற்றில் விளக்கிய “மனிதர்களின் கடமையும் உரிமையும்” என்பவற்றையெல்லாம் ஆடவர்க்கும் பெண்டிருக்குமாய் சேர்த்தே கூறியுள்ளோம். மேலும் இன்னும்வரும் நமது முரசின் ஒலியில் சமதர்மஉலகில் பெண்களின் நிலைமை எவ்வாறிருக்குமென்பது தெளிவுபடுத்தப்படும்.

ஒரு நாட்டை ஆளும் அரசாங்கம் எதுவாயிருப்பினும் அது “மக்களெல்லோரும் பிறவியிலொன்றே, மனிதருக்கு எற்படும் எல்லாவித இயற்கை உணர்ச்சிகளும், தேசத்திலுள்ள “மனிதர்கள்” என்ற எல்லோருக்குமுண்டு” என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தொழுகினலன்றி, அந்நாட்டில் அமைதியும், சந்தோகமான வாழ்க்கையும் நிலவுதல் அறிதாம். நாம் சென்ற கட்டுரைகளில் தெளிவுறக்கூறியுள்ளபடி, ஓர் அரசாங்கம் தன்குடிகள், எல்லாவகைகளிலும் இன்புற்று வாழச்செய்தற்கான வழிகளைக்கையாளுவதைவிட, வேறு பெரிய லக்ஷியம்எதையும் கொண்டிருக்க இடமில்லைஎன்னும் சீரியகொள்கை நிலைநிறுத்தப்படல்வேண்டும். அப்படியானல்தான் நாட்டில்,பொய், களவு; சூதுவாது, கட்குடி, விபசாரம் பொய்புனைசுருட்டு, கொள்ளை, கொலை; அகாலமரணம், வறுமை, முதலியவற்று, நாட்டுமக்களனைவரும் சுதந்தரபுருடர்களாயும், ஸ்திரீகளாயும், உடல் உறம் பெற்றவர்களாயும், நல்லஅறிவும் ஆற்றலும் பெற்றோராயும், சுயநலமற்றோராயும் வாழ்வர். சமதர்ம உலகில் எந்த ஒருமனிதனுக்கும் அல்லது மகளுக்கும் சுயநலம் என்பது கடுகளவேனும் இருக்கமுடியாது. ஏனெனில், சுயநலம் என்ற பெரும்பேய் அங்குதலைகாட்ட இடமேஇல்லாதிருப்பதனுல்தான்! அஃதெவ்வாறென்பதை இதனடியில்விளக்குவாம்.

### வேண்டும் திட்டங்கள்.

1. மனித சமூகத்தில் தோன்றிய ஆண் பெண் மக்கள் அனைவரும் மனிதர்கள்தான், எனவே மனிதர்களுக்குண்டாகும் இயற்கை இன்றியமையாத உணர்ச்சிகள் தகுதியான வழிகளில் நிவர்த்திக்கப்படல் வேண்டும்.

2. மனித சமூகத்திற்றோன்றிய ஒவ்வொருவரும் “மனிதர்” என்ற தலைப்பில் கொள்ளப்படுதல் தகுதியேயன்றி, அவர்களுக்குள் மதவேறுபாடுகளேனும், சாதிவேறுபாடுகளேனும் இருத்தல்தகாது;

ஏன்? எனில் மனிதனுப்பிறந்த எல்லோரும் மனிதர்தானே என்று கொள்ளுமிடத்து, நமக்குள் எத்தகைய வேற்றுமையும் எழ இடமிராது அவ்வாறின்றி, மனிதர்கள் என்னும் மகுடத்தின்கீழ் தோன்றும் மக்கள், இந்துக்களென்றும், முகமதியர்களென்றும், கிறிஸ்துவர்களென்றும், பௌத்தர்களென்றும், சீக்கியர்களென்றும் இன்னும் இவைபோன்ற வேற்றுப் பெயர்களால் தங்களைப்பிரித்துக் கொள்வதால், இச்சமூகத்தவர்களெல்லோரும் தம்முள் “மனிதர்கள்” என்ற உணர்ச்சியுடன் ஐக்கியப்பட்டு வாழ்வதற்கும், எல்லோரும் ஒரே (மனித) இனத்தவர் என்பதை எண்ணிஇன்புறுவதற்கும், ஆழிசூழுலகில் தோன்றிய மக்கள் அனைவரும் நமது உடன் பிறந்தோரெனக்கொண்டு ஆர்வமுடன் நேசித்து அகமகிழ்வதற்கும் இடையூறாக,—முட்டுக்கட்டைகளாக,—மக்களை ஒன்றுசேரவொட்டாது தடுத்து நிற்கும் இடைச்சுவர்களாக இம்மதங்காணிற்பதால் இக்குவேற்றுமை என்னும் விடநோய் எழுதுவுண்டாகிறது. மற்றும் சுயநலமும் தோன்றுகின்றது. பரந்ததாராளசிந்தையுடைய ஒருவருங்கூட, தமக்காக வல்லாவிடினும், தமது சமூகத்திற்காக, வகுப்பிற்காக—பிரிவிற்காக அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றனர். இதை நாம்பிரத்தியட்சமாகக்காண்கின்றோம்.

முஸ்லீம் சமூகத்தவர்கள் சமூகத்திற்காகவும், கிறிஸ்துவர்கள் தங்கள் சமூகத்திற்காகவும், சீக்கியர் தங்கள் சமூகத்திற்காகவும், இந்துக்கள் தங்கள் சமூகத்திற்காகவும், பௌத்தர்கள் தங்கள் சமூகத்திற்காகவும், இன்னும் இவ்வாறே தங்கள் தங்கள் சமூகத்திற்காகப் பெரிதும்பாடுவதையும் அவர்களவ்வாறு பாடுபடுவதற்குக் காரணமென்னவெனில், மற்றசமூகத்தவர்களுடன் தாங்கள் சம்பந்தத்தைவிட, தங்கள் மதத்தவர்களுடன் தாங்கள் சம்பந்தம் மிகநெருங்கியது என ஒவ்வொரு சமூகத்திலுள்ள ஒவ்வொரும் கருதுவதுதான் என்பதையும் நேர்மையுடைய எவரே மறுப்பர்?

மற்றும் மதங்களின் பெயரால் இன்றளவும் நடந்துள்ள சச்சரவுகளும் சண்டைகளும், கொள்ளை கொலைகளும் எத்தனையென்பதை உலக சரித்திரம் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குகிறது. இன்னும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும், இவ்விந்திய நாட்டில் நடைபெறும் பெருங்கலகங்கள் எவை எவையுண்டோ அவற்றின் ஆதிகாரணங்கள் என்னவென ஆராய்வோமாயின் அங்கு சமயப்பிணக்கு அல்லது மதச்சண்டை என்பதுதான் காணப்படுகிறது. அத்துடன், இந்தியாவை எடுத்துக்கொண்டோமாயின்; ஒரு பாதிரிமாரிடம் சென்றல் அவர் என்ன கூறுகிறார்?

“உலகிலுள்ள மார்க்கங்களெல்லாவற்றிலும் கிறிஸ்துவமார்க்கந்தான் சிறந்தது. ஏனெனில் மனிதர்கள் செய்யும் பாபங்களுக்காக மனிதகுமாரன் மண்ணில் தோன்றிதம் உயிரையே சிலுவையில் ஈந்தார். ‘அன்பு’ என்பது எங்கள் கிறிஸ்துவசமூகத்தின் பீடமாகவிருக்கிறது என்று விஸ்தாரமாகக்கூறுகிறார்.

அவரைவிட்டு ஓர் இந்து ஆச்சாரியிடம் சென்றலோ, “உலகிலுள்ள மற்ற மதங்களெல்லாம் இன்று நேற்றுதான் உண்டாக்கப்பட்டன; ஆனல்எங்கள் இந்துமதமோ கணக்கிடமுடியாதபடியான அத்தனை கோடி யுகங்களுக்கு முன்னரே உண்டானது மேலும்மற்ற மதங்களைப்போல் இது மனிதர்களால் உண்டாக்கப்பட்டதல்ல. அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய கடவுளாலேயே உண்டாக்கப்பட்டது. மேலும் கடவுள்கள் இம்மதத்திற்றுன் திருவவதாரஞ்செய்து திருவிளையாடல்கள் நடத்தினர்! எனிதானமோட்சசாதனங்கள் இம்மதத்தில்தான் அடங்கியிருக்கின்றன” என்று அளக்கிறார்கள்.

முகமதியர்களோ, “உலகிலுள்ள மற்றெல்லாமதங்களையும் விட முஸ்லீம்மதமே தலைசிறந்தது. இதிலில்லாத கொள்கைகள் உலகிலில்லவேயில்லை. உலகமெல்லாம் முஸ்லீம்களாகிவிட்டால், அதன் பின்னர் எவ்வகையான குறையும் காட்டிவிருக்காது” என்கின்றன.

இவ்வாருக ஒவ்வொருமதத்தரும் தங்கள் தங்கள் மதப்பெருமைபேசி அதனை நிலைநாட்டவே பெரும்பாடுபடுகிறார்கள்,—பிரசாரஞ் செய்கிறார்கள், துண்டுபிரசுரங்கள் வழங்குகிறார்கள், புத்தகங்கள் இயற்றி வெளியிடுகின்றார். இன்னும்என்னன்னவோமுயற்சிகளெல்லாம் செய்கிறார்கள். இது கண்கூடு. இந்தமதப்பிரசாரங்களே ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் மதமே உயர்ந்தது [illegible] தங்களினத்தலைவர்களையே ஓர்வகைவிஸ்வாசத்துடன் நேசிக்கும் தன்மையும் அதிகரித்திருப்பதைத் தெளிவுபடுத்துவதாகும்.

அதிக தூரம் போகாமல் இன்னும் சுருக்கமான உதாரணங்கொண்டு விளக்கவேண்டுமானல், சில தினங்களுக்குமுன், இந்தியாவில் வெளியான “இந்திய மந்திரியின் சமூகத்தீர்ப்பின்மேல் கிளம்பிய மதக்கொக்கரிப்புகளையே தக்க தோர் மேற்கோளாகக் காட்டலாம்.—இன்றைய இந்தியாவில் [illegible] 35 கோடிமக்களும் “இந்தியர்” என்ற ஒரே மகுடத்தின் [illegible] தாய்ப்பாடுபடுந்தால் இந்தியமக்களனைவருக்கும் பொதுவான ஒரே அறிக்கை வெளியிடப்பட்டிருக்கத் [illegible] 35 கோடி மக்களும் நாங்கள் “இந்தியர்கள்” என்ற தோரணையில் வாவேற்றிருப்பார்களென்பதிலும் [illegible]?

எனவே, மக்களனைவரும் எவ்வகை பேதமுமற்றோராய் வாழ வேண்டுமாயின் “சமதர்ம உலகில்” மதப்பாதுபாடுகளோ இருத்தல் கூடாது, இருக்கவும் முடியாது. ஏனெனில் அவற்றிற்கு சமதர்ம உலகில் வேலையற்றுப் போவதால்தான். இது எப்படியென்பதை இனிவரும் கட்டுரைகளிற் காண்க.

3. எப்பொழுது மதபேதங்களென்பதே இல்லாது, “நாட்டிலுள்ள எல்லோரும் நாட்டுமக்கள்” என்ற கொள்கை பரவுகிறதோ, அப்பொழுது இந்த “சாதிப்பூசல்” களுக்கும் இடமிருக்க முடியாது.

4. ஒருதேசத்தில் பிறந்த அனைவருக்கும் ஐந்துபிராயமுதலே கட்டாயக்கல்வி கொடுக்கப்படல்வேண்டும்.

### கல்வித்திட்டம்.

அ. சிறுவப்படுவ பாடசாலைகள் அரசாங்கத்தின் நேர்பார்வையிலே

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.

# சேலம் ஜில்லாவில் சுயமரியாதைப் பிரசாரம்.

## இயக்கத்தோழர்கள் விஜயம்.

## திரு. ஆர். கே. பாலு அவர்களுக்கு உபசாரப்பத்திரம்.

### திருச்செங்கோடு.

25—9—32 மாலை 4 மணிக்கு திருச்செங்கோடு வாலிபசகவாசசங்க ஆதரவில் 40 கால் மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. சங்கக் கட்டிடத்திலும் பொதுக்கூட்டம் நடக்குமிடத்திலும் பூக்களாலும் தட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தட்டிகளில் ஆர். கே பாலு அவர்களே வருக! வருக!! அ. பொன்னம்பலனாரே வருக! இரத்தினசபாபதி அன்னபூரணியம்மையாரேவருக! என்றும் பெரிய எழுத்தால் எழுதப்பட்டு முக்கியமான இடங்களில்காட்டப்பட்டிருந்தது. முதலாவதாக தோழர்ஆர். கே. பாலு (யூனியன் போர்டு தலைவர்) அவர்களையும் மற்ற இயக்கத் தோழர்களையும் மாலை சூட்டி வாத்தியக் கோஷங்களுடன் கூட்டத்திற்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டது. கூட்டத்திற்கு ஆயிரம் ஜனங்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர்.

விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியமான தோழர்கள்:— ஆர். கே. பாலு, டி. ஆர். பெருமாள் முதலியார் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி டாக்டர் நாராயண நாயர், எஸ். வி. இராமசாமி அய்யங்கார் (உயர்தரக்கலாசாலை தலைமை உபாத்தியாயர்) சப் இன்ஸ்பெக்டர் தீனதயாளு நாயுடு பால கிருஷ்ணம்பிள்ளை, டி. வி. நடேச முதலியார், இராமசாமி ஐயங்கார் (சிரஸ்தார்) முன்சிப் கல்லையாகவுண்டர், கொமாரசாமி முதலியார், விஸ்வநாத முதலியார், அ. பொன்னம்பலம், இரத்தினசபாபதி, அன்னபூரணியம்மையார், எஸ். வி. லிங்கம், என். பி. காளியப்பன், நாகலிங்கம் "குடி அரசு" மானேஜர் முதலியவர்கள் முக்கியமாய் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

வாலிப சகவாச சங்கத்தாரால் யூனியன் போர்டு தலைவர் தோழர் ஆர். கே. பாலு அவர்கட்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதற்கு தோழர் டி. ஆர். பெருமாள் முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். பிறகு தோழர் ஆர். கே. பாலு அவர்களின் தலைமையின் கீழ் பொதுக்கூட்டம் தொடங்கப்பட்டது. சீர்திருத்தக் கீதங்கள் பாடியவுடன் "சமுதாய சீர்திருத்தம்" "சுயமரியாதை தத்துவங்கள்" "காந்தியும் தீண்டாமையும்" என்னும் பொருள்பற்றி சீர்திருத்தத்தோழர்கள் அன்னபூரணியம்மையார், அ. பொன்னம்பலம், இரத்தினசபாபதி, எஸ். வி. லிங்கம், என். பி. காளியப்பன் முதலியவர்களால் உருக்கமாக சொற்பொழிவாற்றப்பட்டது. அன்னவர்கள் சொற்பொழிவாற்றும்போது பெண்களுக்கு எல்லா வகையிலும் சமத்துவம் கொடுக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், விதவா விவாகத்தை ஆதரிக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், பால்ய விவாகத்தைக்கண்டித்தும், ஜாதி பேதம், மதபேதம் பணக்காரன் ஏழை என்கின்ற பேதம், மூடப்பழக்க வழக்கங்கள், கோழைத்தனம், தீண்டாமை, பகுத்தறிவின்மை முதலியவைகள் ஒழியாமல் சுயராஜ்யம் பெற்றும் பயனில்லை என்றும் சுய ஆட்சியில் மக்களுக்குள் சமத்துவம் சகோதரத்துவம், கல்வி முதலிய பெற்று வாழவேண்டுமென்றும், கோயில், பொதுக்குளம், கிணறு, பாதை, இன்னும் மற்ற பொதுஸ்தாபனங்களில் தீண்டாதாரையும் அனுபவிக்க இடங்கொடுக்காத வரையில் தோழர் காந்தி அவர்களின் உயிர் போய்விடுமென்று கூறினுல் இதற்கு உயர்ந்த சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வைதீகப் பித்தர்கள் தான் காரணஸ்தர்களாவார்களென்றும், உருக்கமாயும் தெள்ளத்தெளிவாயும் பேசினுர்கள்.

பிறகு தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. இதிலிருந்து இவ்வூரில் ஓர் பரபரப்பும் உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. சுயமரியாதை இயக்கத் தோழர்களெல்லாம் 26—9—32ந் தேதி காலை மோட்டாரில் ராசிபுரத்திற்கும் புறப்பட்டுச் சென்றுர்கள்.

### இராசிபுரம்.

திருச்செங்கோட்டிலிருந்து 26—9—32 திங்கட்கிழமை காலை பயணமாகி சுயமரியாதை இயக்கத் தோழர்களான அ. இரத்தினசபாபதி, ஆர். அன்னபூரணி அம்மாள், எஸ். வி. லிங்கம், அ. பொன்னம்பலம், எஸ். சி. ஆர். சாமி, (குடி அரசு மானேஜர்) நாகலிங்கம் ஆகியவர்கள் மோட்டாரில் பகல் 12 மணிக்கு இராசிபுரம் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள் நன்கு வரவேற்று அவர்கட்குக் குறிப்பிட்டிருந்த தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றுர்கள்.

#### மாலை பொதுக்கூட்டம்.

மாலை 6 மணிக்கு இவ்வூர் புதுச் சந்தைப்பேட்டையில் சுயமரியாதைப்பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு வேலுக்குறிச்சி மிட்டாதார் தோழர் சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகித்து முன்னுரை கூறினர்.

பின்னர் தோழர்கள் அ. இரத்தினசபாபதி அ. பொன்னம்பலம், ஆர். அன்னபூரணி, எஸ். வி. லிங்கம் முதலியவர்கள் சுயமரியாதை இயக்கக்கொள்கைகளைப்பற்றியும், பேயாடல், பிசாசு ஓட்டல், பூசாரிகளின் மந்திரப் புரட்டு, நமது பெண்மக்களின் அறியாமை நிலை, ஆகியவைகளைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. உணவிற்குப் பின்னர் பிரசாரத்தோழர்கள் மோட்டாரில் சேலத்திருப் பிரயாணமானர்கள். சேலத்திலிருந்து 27-9-32ல் ஈரோடு வந்து சேர்ந்தார்கள்.

---

### நாகூர்.

#### அனுமாருக்கு உயிர்வந்தது.

நாகூர் பெருமாள் குளக்கரையில் நெடுநாள் வசித்துவந்த அனுமார் விக்கிரஹத்தை யாரோ சிலர் புரட்டிக் குப்புறத் தள்ளி விட்டுப் போய்விட்டார். பாவம் சிரஞ்சீவியாகிய அனுமாரே செத்துவிட்டாரே யென்று சில ஆஸ்திகர்கள் கவலையடைந்து பார்ப்பன அடிமைகளின் பணஉதவியைப்பெற்று 14-9-32ல் ஓர் பார்ப்பனரால் உயிர் கொடுக்கப்பட்டது. அனுமார் இப்போது சிரஞ்சீவியாய் விளங்குகிருர். இனி அனுமார் (குரங்கு) பக்தர்களுக்கு கவலை வேண்டியதில்லை.

ஆஸ்திகர்களிடம், அனுமார் (குரங்கு) கல் சிலையைக்காட்டி பார்ப்பான் வயிறு வளர்க்க வேண்டியது. பார்ப்பனரல்லாத குரங்கு பக்தர்கள் பார்ப்பான் காலில் விழுந்து பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டியது. எவ்வளவுதான் எடுத்துச்சொன்னலும் கல்லுக்குரங்கு மீது ஆஸ்திகர்கட்குப் பக்திகுறையவில்லை. எல்லாம் அறியாமையின் கொடுமைதான்! என் செய்வது?

---

### கூலூர்.

#### பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற சங்கம்.

21-9-32ந்தேதி ஷை சங்கத்தின் கூட்டம் தோழர் எஸ். எல். நஞ்சப்பத்தேவர் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிருர்.

---

### தமிழ்நாட்டுப் புரோகித மறுப்புச்சங்கம்.

#### 4–மணமகன் தேவை.

சோழிய வேளாளர் வகுப்பில் தோன்றியவரும், 17-வயதுடையவரும், 5-வது வகுப்புவரை படித்தவருமாகிய ஓர் விதவைப் பெண்ணுக்கு மேற்படி சமூகத்திலேயே தோன்றிய ஓர் மணமகன் தேவை.

மணமகன் 25-வயதிற்குட்பட்டவராகவும், கல்வி கற்றவராகவும், சம்பாத்தியமுடையவராகவும் இருத்தல் அவசியம்.

2. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவரும், கல்வி கற்றவரும் சீர்திருத்தத்தில் ஆர்வ மிக்கவருமாகிய 25 வயதுடைய ஓர் பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்—கல்விகற்றவராகவும், சம்பாத்தியமுடையவராகவும், 28-வயதிற்குட்பட்டவராகவும். பூரண சுயமரியாதைக் கொள்கையைப் பின்பற்றக்கூடியராகவும் இருத்தல் வேண்டும்.

3. மராட்டிய வகுப்பில் உதித்தவரும் கல்விகற்றவரும் 25.வயதையுடையவருமாகிய ஓர் விதவைப்பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்—கல்வி கற்வாாகவும், தொழில் உடையவராகவும் இருத்தல் அவசியம்.

4. தாசி வகுப்பைச்சேர்ந்த சுமார் 20-வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. இப்பெண்ணுக்கு தங்கள் சமூக வழக்கப்படி பொட்டுக்கட்டப்பட்டிருந்தது. அதனை வெறுத்து (பொட்டை) ஒதுக்கிவிட்டு இனி மனமொத்த ஒருவரையே திருமணம் செய்து கொள்வதென்ற முடிவிற்கு வந்திருக்கிறது. அப்பெண்ணுக்கு சிறிது சொத்து வசதியுமுண்டு. தமிழ்படிப்புமுண்டு, நல்ல அழகுண்டு, சீர்திருத்தத்தில் ஆர்வமிக்கவுண்டு.

மணமகன்—நன்கு படித்தவராகவும், தொழில் வருமானமுடையவராகவுமிருத்தல்வேண்டும். வயது சுமார் 25-க்கு மேற்படாதவராகயிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- மேலே கண்ட நான்கு பெண்களுக்கும் மணமகன் தேவை. விருப்பமுள்ளவர்கள் அவரவர்களுடைய நிலைமையை நன்கு விளக்கி விபரமாக எழுதவேண்டும். கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும். பதிலுக்குத் தபால் தலைகள் வைத்து அனுப்பவேண்டும். திருமணம்சங்கச்சார்பில் சிக்கனமுறையில் நடைபெறும். விலாசம்;—

ச. ம. சி. பரமசிவம்,
காரியதரிசி,
தமிழ்நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கம், 22 பாளையம்பஜார்,
உறையூர் போஸ்டு, திருச்சி.

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

## மூடநம்பிக்கையை வளர்க்கின்றன.

கடவுள் பக்தியும், மத நம்பிக்கையுமே நாட்டில் மூட நம்பிக்கையை வளர்த்து வருகின்றன. எனவே இவையிரண்டும் ஒழிந்தாலல்லது இவ்வுலக மக்களைப்பீடித்துள்ள மூட நம்பிக்கையென்னும் கொடும்பேய் ஒழியாதென்று பல அறிஞர்களும் புகன்று வருகின்றார்கள். மூடநம்பிக்கைக்குப் பிறப்பிடமாயுள்ளது மதசாஸ்திரங்களும், அதற்கு ஆதாவுகாட்டி நிற்கும் தாகர்கள், சோதிடர்கள், சாமியாடிகள், லோக குருக்கள், பார்ப்பனர்கள், பாதிரிகள், மௌல்விகள், ஆலிம்கள், மஸ்தான்கள் முதலிய சுயநலப் புல்லுருவிகளேயாவர் என்பதையறிந்து உங்கள் "குடி அரசு" இன்னோர்களின் பித்தலாட்டங்களையும் மூடநம்பிக்கையை வளர்க்கும் முறைகளையும், முயற்சிகளையும் தெள்ளத் தெளியப் பாமரர்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் விளக்கி, நம் நாட்டில் "அறிவு" ஜோதியை தோன்றச் செய்து வருவது பிரத்தியக்ஷம். இதற்காகவே அச் சுயநலக்கோட்டான்களின் கூட்டம் "பகுத்தறிவு" என்னும் ஞானசூரியன் உதயமானதைப்பார்க்க அஞ்சி அறியாமை என்னும் இருளில் வாழும் மக்களிடம் போய் "பகுத்தறிவு"க்காரர்களை காபிரென்றும், நாஸ்திகர் என்றும், நேச்சரி என்றும் பலவாறு நிந்தித்து வந்தார்கள், வருகின்றார்கள். ஆனால் இவர்களின் ஜம்பம் இனி ஒரு பொழுதும் பலிக்கப்போவதில்லை; பகுத்தறிவுச்சூரியன் உச்சஸ்தானத்திற்கு வந்துவிட்டான். மூடநம்பிக்கையென்னும் துயிலிலிருந்த மாக்கள் பலரும் விழித்தெழுந்து, பகுத்தறிவுச் சோதியைக்கண்டு ஆனந்தசாகரர்களாய் மகிழ்ந்து ஆனந்தத்தாண்டவம்புரிய ஆரம்பித்துவிட்டார்கள். என்றாலும் எங்கெங்கோ சிற்சில மூலையில் சுயநலக்கூட்டம் கும்மாளம் போட்டு வருவது என்பது யாவருமறிந்த உண்மை. இந்த மூடநம்பிக்கையினாலே கட்டுண்டு கிடக்கும் மாக்களிற் பலர் தாம்கொண்ட மூடநம்பிக்கை, மூடபக்தி, மூடபழக்கவழக்கம் முதலியவைகளே அறிவுடைய செயலென்றெண்ணி மூடநம்பிக்கையினின்று விடுபட்ட மக்களைக் கண்டு எள்ளி நகையாடியும், பழித்தும், பலாத்காரத்தால் தம் வழிக்குத்திருப்பவும் முயன்று வருகின்றார்கள். இந்த மூடநம்பிக்கையினாலேதான் நமது நாட்டில் வியாதிகளும் விபசாரங்களும் பெருகிவருகின்றன. தீண்டாமை யென்னும் கொடும்பேய் தலைவிரித்தாடிவருகின்றது. பெண்ணுரிமை பெரிதும் பறிக்கப்பட்டு வருகிறது. கொலைகளும், குற்றங்களும் மலிந்து வருகின்றன. ஒற்றுமை குலைந்து வருகின்றது. ஒற்றுமை குறைந்து வருகின்றது. மக்களின் செல்வமெல்லாம் வீணில் பாழ்படுத்தப்பட்டு வருகின்றது. முயற்சி என்னும் அருங்குணம் முற்றாய் ஒழிந்து வருகின்றது. மக்கள் சோதிடம், சகுனம், குறிபார்த்தல், சாமியாடல், பேய்கள், ஆத்மா, கடவுள் பக்தி முதலிய வீணான கொள்கையில் நம்பிக்கை கொண்டு காலத்தையும் செல்வத்தையும் ஊக்கத்தையும் பறிகொடுத்து நாளடைவில் பகுத்தறிவற்ற மிருகங்களின் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். உலகத்தில் பெருகிவரும் எல்லாத்தீமைகளுக்கும் இந்த மூடநம்பிக்கைதான் காரணமாய் மிளிர்கின்றது. இந்த மூடநம்பிக்கையோ கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் வளர்க்கப்பட்டுவருகிறது. இதுபற்றியே பிரமஞான சபையைச்சேர்ந்த மாஸ்டர் குதூமி என்னும் அறிஞரும் "கருணாநிதியாயுள்ள கடவுளின் பெயரைச் சாட்டி ஜனங்கள் இந்த நடுக்கமுறும் மூடக்கொள்கைக்கு வழிபட்டு அநேக குற்றங்களைச் செய்திருக்கிறார்கள்." என்று கூறியுள்ளார். எனவே "கடவுள் வெறியும் மதவெறியும்" இந்த மூடநம்பிக்கையின் வாயிலாகவேதம் ஆர்பாட்டத்தை செலுத்திவருகின்றதென்பது மறுக்க முடியா உண்மையாகும். பகுத்தறிவை வளரவிடாது தடுத்து நிற்கும் இந்த மூடநம்பிக்கை ஒழிந்தாலல்லது இந்திய நாடு விடுதலை பெறப்போவதில்லை. மூடநம்பிக்கை என்னும் கொடும் பேய் உலகிலேயே அதிகமாய் நர்த்தனம் செய்யும் நாடு இந்தியாதான். ஆகையால் இந்தியா விடுதலைபெற உழைக்கும் அன்பர்கள் முதலாவது மூடநம்பிக்கையை வேருடன் அறுக்கும் வேலையில் முனைந்து தொண்டாற்ற வேண்டும். மூடநம்பிக்கையை ஒழியாது சுயராஜ்ஜியம் பெற்றுவிட்டாலும் அது சுகராஜ்யமாயிராது துன்பந்தரும் ரஸ்புடீன் ராஜ்யமாகவே இருக்குமென்பது நிச்சயம்.

மூடநம்பிக்கை செய்துவரும் பெரும்வேலைகளுள் மாந்திரிகம்என்னும் மயக்க மொழிகளால் அதுசெய்து வரும் ஆர்ப்பாட்டம் கொஞ்ச நஞ்சமன்று. இந்து மூடநம்பிக்கையினாலே எத்தனையோ குடும்பங்களில் தன்கணவனை தன்வயப்படுத்த வெண்ணி இறுதியில் புருஷனையே கொன்றிருக்கின்றனர். இந்த மாந்திரீக நம்பிக்கையினாலேயே உயர்குலப்பெண்களைக்கூடபோய்ப்பற்றியதாகசாமியாடும் சில குடிகாரர்களும, விபசாரர்களுமான அயோக்கியர்கள் முன்னிருந்தி அவர்களால் பிரம்படிபடுமாறு செய்தும், அவர்கள் எச்சிலையுண்டு வாழும்படி செய்தும் வருகின்றனர். நாசிக்கிலிருந்து 18 மைல்தூரத்திலுள்ள பிம்பல்காவலிக்கருகிலிருக்கும் ஒரு கிராமத்தில் பயங்கர சம்பவமொன்று நடைபெற்றது. அதாவது அக்கிராமத்திலுள்ள ஜனங்களுக்குக் காலரா நோய்கண்டது. அக்கிராமத்திலுள்ள மாந்திரீக ஜாதியாராகிய கோவிஜாதியார்தான் மந்திரஞ்செய்து காலராவை அக்கிராமத்திற்கு கொண்டுவந்து விட்டார்கள் என்று அக்கிராம ஜனங்கள் கருதி, கோவிஜாதியாரை அடித்தனர். கோவிஜாதியார் அஃது தங்கள் செய்கையல்ல வென்று எவ்வளவோ தெரிவித்தும் பயன்படாததால் அவர்கள் அக்கிராமத்தைவிட்டு ஓடிவிட்டனர். ஆனால் பாவம் ஒரு வயோதிகமாது அக்கிராமத்தில் அகப்பட்டுக்கொள்ளவே கிராம ஜனங்கள் அவளது கை கால்களைக்கட்டி அடுக்கிய கட்டைமேல் அவளைவைத்து உயிருடன் தீக்கொளுத்தினர். என்ற விஷயம் "டைம்ஸ்" பத்திரிகையின் நாசிக்நிருபரால் 1—9—31 ல் மேற்படி பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது.

"துர் ராவுத்தர் என்றொரு முஸ்லீம் மைம்பொன் என்னும் தன் மகளைக்கோட்டூரிலுள்ள சின்னப்பைய ராவுத்தருக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாக நிச்சயம்செய்துகொடுத்தான். பின் சேத்து மடையில் வண்டி ஓட்டுபவராகிய அப்பாவு ராவுத்தர் என்பவர் தன்மகளுக்கு மேற்படி பெண்ணைவிவாகம் செய்து கொடுக்கும்படி வற்புறுத்தியதாகவும், ஆனால் பெண்ணின் தகப்பன் மறுக்கவே, மேற்படி பெண்ணை எப்படியாவது கெடுத்துவிடவேண்டுமென்று கெட்ட எண்ணத்தின்மீது மாந்திரீக சக்தியால் வசியம்செய்ய எத்தனித்ததாகவும் சொல்லப்படுகிறது. மேற்படி அப்பாவுராவுத்தருக்கு மாந்திரீகம் தெரியுமெனவும், அவருடைய மந்திரத்தின்மீது மேற்படி பெண்ணுக்குச் சிலகாலமாகப் புத்திஸ்வாதீன மில்லாமல் காற்றுப் பிடித்தவளைப் போலிருந்தாளெனவும் சொல்லப்படுகிறது. மேற்படி காற்றுத்தோஷத்தைப்போக்குவதற்காக மாந்திரீகர்களைக்கொண்டுவந்து பரிசோதித்ததில் மேற்படி பெண்ணுக்குக்காற்றுத் தோஷம் யாதொன்றுமில்லையெனவும், யாரோ மாந்திரீக சக்தியால் புத்திஸ்வாதீனமில்லாமல் செய்திருப்பதாகவும் சொல்லப்பட்டதாம். அதன்மீது வீட்டிலும் வீட்டைச்சுற்றியும் பரிசோதித்துப்பார்த்ததில் வீட்டின் முன்கதவில் வாசற்படிக்குக்கீழ் ஒரு முட்டையும் சில எலும்புத்துண்டுகளும் புதைத்துக்கீழே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டெடுத்தார்களாம். முட்டையின் மீது உருதுவில் சிலசக்கரங்கள் வரையப்பட்டிருக்கின்றனவாம். கோட்டூர்பேஷ் இமாமை வரவழைத்து கேட்டதில் மேற்படி முட்டையின்மீது எழுதப்பட்டிருக்கிற எழுத்துக்களைப் பரிசோதிக்கும்படி கேட்டதில் மேற்படிஎழுத்துக்கள் பெண்ணை வசீகரிக்கவும், தன்கணவனுடன் கூடியிருக்க இயலாதபடியும் கண்டிருப்பதாகவும் சொன்னார். மேற்படி முட்டை மந்திரித்து வாசற்படிக்குகீழ் வைத்த தேதியிலிருந்து மேற்படி பெண்ணுக்குப்புத்திஸ்வாதீனமில்லாமல் இருப்பதுடன், மாந்திரீக வசீகரத்தின் பலத்தால் எதிரி வீட்டிற்குப்போகப் பிரயத்தனமும் தன்கணவனைக்கண்டால் அருவருப்பும் உண்டாகிவருவதாகச்சொல்லப்படுகிறது. கோட்டூர் போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

"சஜாவி என்றகிராமத்தில் பழையபழக்கங்களில் மிகுந்த நம்பிக்கையுள்ள முகம்மத் உமாராஎன்ற ஒரு பெண்ணும் மற்றும் சில பெண்களுஞ் சேர்ந்து பாடிக்கொண்டிருக்கும்போது திடீரென்று தொண்டை கெட்டுப்போய்ப் பாடமுடியாமல் போய்விட்டதாம். அதை உத்தேசித்து சரஸ்வதிதேவிக்கு சுமார் 8 வயதுடைய குனியா என்ற சிறுமியைப் பலியிட்டுக்கொலை செய்த குற்றத்திற்காகப்பாரேயிச் செஷன்ஸ் ஜட்ஜால் தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டாள். வழக்குவிசாரணையின்போது, திடீரென்று எல்லாப்பெண்களுக்கும் தொண்டைகெட்டுப்பாடமுடியாமல் போய்விட்டதென்றும், பிறகுதான் பகவதி சரஸதிக்கும் ஒருநரபலி கொடுப்பதாகவேண்டிக்கொடுப்பதாகவும் அதற்காகஒருநாள் குனியாஎன்ற 8 வயதுச்சிறுமியை மரத்தில் கட்டி வைத்து, ஒரு மண்வெட்டியால் அவளைத்தலையில் அடித்துக்கொன்றதாகவும் அதன்பிறகுதன் தொண்டை சரிப்பட்டு நன்றாகப்பாட முடிந்தது என்பதாவும் சொன்னாள். (தாருல் இஸ்லாம்)

சூல்தியா என்னும் வடஇந்தியாவிலுள்ள ஓர்ஊரில் பெரும்பாலான குடும்பங்கள் அரந்தான் (சமைக்காமலிருத்தல்) கொண்டாடினார்கள். இவ்விநோதக்கொண்டாட்டம் ஒரு படகுக்காரனின் பயமுறுத்தலால் நேர்ந்ததாம். அப்படகுக்காரன் படகில்சென்று கொண்டிருக்கும்போது தன்முன் ஒரு பெண்ணுருவம் தோன்றியதாகவும், திடீரென்று அவ்வுருவம் மூன்று தேவகன்னிகைகளாக மாறிச்செவ்வாய்க்கிழமையாகிய அன்றையத்தினம் யாராவது சமைத்தால் அந்நகரத்தில் கொடியவியாதி

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# ஒப்பந்தத்தை ஆதரித்ததேன்?

## டாக்டர் அம்பெத்கார் விளக்கம்.

பம்பாய் சமரச மகாநாட்டில் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப்பேசியபோது டாக்டர். அம்பேத்கார் கூறியதாவது;—

சிலதினங்களுக்கு முன் என்நிலைமை இருதலைகொள்ளி எறும்புபோலிருந்தது. எனது நிலைமையைவிட வேறு எவரும் அவ்வளவு சங்கடமான நிலைமையிலிருந்திருப்பார்களென்று கூறமுடியாது. நான் இரு முக்கிய விஷயத்தில் எதைத்தெரிந்து கொள்ளுவதென்பதை அறியாது திண்டாடினேன். ஒருபுறம் உலக சிரேஷ்டரென விளங்கும் ஒரு மகானின் உயிர்ஆபத்திலிருந்தது; மற்றொரு பக்கம்எனது சமூகத்தின் நலஉரிமையைப்பாதுகாக்கவேண்டிய கடமை எனக்கிருந்தது. இதில் எதைத்தெரிந்து கொள்ளுவதென்பதை அறியாது திண்டாடினேன். இறுதியில் மகாத்மாவின் உயிரைப்பாதுகாக்கக் கூடியதும், எதிர்காலத்தில் எனது சமூகத்தின் நல உரிமைகளைப்பாதுகாக்கக் கூடியதுமான ஒருசமரச முடிவுக்கு வந்ததைப்பற்றி நான் சந்தோஷிக்கிறேன்.

சமரச ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முக்கியகாரணமாயிருந்தவர் மகாத்மாகாந்தியே யெனலாம். அவரது முயற்சியும் தாராளசிந்தனையுமேபெரும்பான்மையாக சமரசவெற்றிக்குக் காரணமாயிருந்தது என்பேன். ஆகவே சமரச வெற்றிக்கான பெருமை பெரும்பாலும் மகாத்மாவுக்கே உரியதென்பேன். நான்சிறையில் முதன் முறை அவரைக்கண்டு பேசியதும் எனது கொள்கைக்கும் அவர் கொள்கைக்கும் அவ்வளவு வித்தியாசமில்லையெனக் கண்டதும் நான் பேராச்சரியமடைந்தேன். (சந்தோஷம்) சமரசத்தலைவர்களுக்குள் புதிய தேர்தல்திட்ட சம்பந்தமாக ஏதேனும்தகராறு எழுந்தால்— சர். தேஜ்பகதூர் சாப்ரு ஏற்கனவே உங்களுக்குத் தெரிவித்திருந்தது போல் சிலசிறு தகராறுகள் எழுந்தது உண்மையே! அந்த தகராறுகளை காந்திஜியிடம் தெரிவித்தார். அவர் எனது சார்பாக நின்று அத்தகராறுகளை போக்கினார். லண்டன்மகாநாட்டில் எனது கொள்கைக்கு முற்றிலும்மாறாக, என்னைஎதிர்த்து வந்த அவர்—மகாத்மாகாந்தி, தற்போது எனது கொள்கையை ஆதரித்து எனக்கு சாதகமாயிருந்தது, எனக்குப் பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. அவர்எனது எதிர்கட்சியின் கொள்கையை ஆதரிக்காதிருந்தது எனக்கு இன்னமும் பேராச்சரியமாயிருந்தது. இவ்விதமாக மகாத்மாஎனக்கு துணைநின்று, எனக்கேற்பட்டிருந்த சங்கடமான நிலைமையைப் போக்க ஏதுவாயிருந்ததற்கு நான் அவருக்குஎன்றும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்குஒரே கவலையிருக்கிறது மகாத்மாகாந்தி லண்டன்மகாநாட்டில் தமது கொள்கையைத்தெரிவித்து; அப்பொழுதே என் என்னை ஆதரித்திருக்கக்கூடாதென்பதேயாகும். மகாத்மா அப்பொழுதேஎன்னை ஆதரித்திருந்தால் அவர் இவ்விதம் தமது உயிர்த்தியாக விரதத்தைக்கைக்கொண்டிருக்க வேண்டிநேரிட்டிருக்காது. எனினும் அதெல்லாம் முடிந்தகாரியம். முடிந்துபோன காரியத்தைப்பற்றிப்பேசிப்பயனென்ன.

மகாநாட்டில் வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்துப்பேச எனக்கொரு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு ஆனந்திக்கிறேன். தீர்மானத்தை நான் எந்தவிதமாக ஆதரிப்பதென்பதேகேள்வி. நமக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி சகல திண்டாதாரின் ஆசாவும் [illegible] என சிலபத்திரிகைகள் எழுதிவருகின்றனா. இது சம்பந்தமாக எனது கருத்தைஇங்கு தெளிவுபடுத்திக்கூற விரும்புகிறேன். நானும் எனதுகட்சியும், எனது வகுப்பைசசார்ந்த இதர நண்பர்களும் சம்பந்தபட்டவரையில் அவர்கள் இந்த ஒப்பந்தத்தை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளச்சித்தமாயிருக்கிறோம். இதைப்பற்றி எவருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வேண்டியதில்லை. ஆனால் இந்து சமூகத்தினர் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்து அதன்படி நடக்கச்சித்தமாயிருப்பார்களா வென்பதைப்பற்றியே எங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது.

ஹிந்து தலைவர்கள்:—சந்தேகமே வேண்டாம்; நாங்கள் ஆதரிக்கத்தயாராகவிருக்கிறோம்.

கெட்டகாலசமாக இந்துசமூகம் பலபிரிவினையாகப் பிரிந்திருக்கிறது. பலசமூகங்களாகப் பிணைக்கப்பட்ட ஒரு பெரியசமூகமாக விருந்தது. ஆகவே இந்துக்கள் நாம் தற்போது செய்திருக்கும் ஒப்பந்தத்தை பரிசுத்தமான ஒருபுனித ஒப்பந்தமாகக் கருதுவார்களென்று நம்புகிறேன். இந்த ஒப்பந்தத்தை அவர்கள் அமுலுக்குக்கொண்டுவர உழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

### சர். சாப்ரு முயற்சி.

இந்த சந்தர்ப்பத்தில் சமரச ஒப்பந்தத்திற்கு விசேஷ முயற்சியெடுத்துக்கொண்ட சர். சாப்ருவைப்பாராட்டி சிலவார்த்தைகள் கூறவிரும்புகிறேன். சர். சாப்ருவை இரண்டுவருடங்களாக நான் அறிவேன். விசேஷமாக லண்டன் மகாநாட்டில் தான் அவரைநன்கு அறியக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. சிறியவகுப்பினர் மட்டில் அனுதாபமும், ஜாதிமத துவேஷமற்ற ஒருதலைவர் இந்தியாவில் இருப்பாரேயானால் அவர் சர். சாப்ருவேயாவார். புதிய அரசியல் சீர்திருத்தத்தில், சகல சிறுபான்மையினருக்கும், சம அரசியல் உரிமையிருக்க வேண்டியது அவசியமென, அவர் ஆதிமுதல் நீதியான முறையில் வாதாடி வந்திருக்கிறார். சிறுபான்மையினரின் நலஉரிமைகளைப் பாதுகாக்க விரும்பும் தலைவர்களும், பொதுமக்களும் இவ்விஷயத்தில் அவர்மீது நம்பிக்கை கொண்டிருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியாரை நான்மறந்துவிடமுடியாது. அவரது முயற்சியின்றேல் இந்த ஒப்பந்தமே ஏற்பட்டிருக்காதென்று நினைக்கிறேன். ஒப்பந்தத்தின் ஒரு முக்கியமான விஷயத்தில் பெருந்தகராறு ஏற்பட்டு, சமரசமே முறிந்துவிடும் போலிருந்தது. அந்நேரத்தில் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் குறுக்கிட்டு, அதற்குசரியான யோசனைகூறி, சமரசம் முறிந்துபோகாமல் காப்பாற்றினார். அவருக்கும் எனது விசேஷ நன்றியை செலுத்திக்கொள்ளுகிறேன்.

பண்டித மாளவியாஜிக்கு எனது நன்றி உரியதாகும். சமரச ஏற்பாட்டின்போது, கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டன. அந்நேரத்தில் ஆத்திரத்தில் கடுமையான பதங்களை உபயோகித்திருக்கலாம். பண்டிதர் தமது பொறுமையைக் கைவிடாமல், சாந்தமாகவும், நிதானமாகவும் நடந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் முதன்மந்திரி வகுப்புவாரிதீர்ப்பில் குறிப்பிட்டிருந்த தனித்தொகுதிதேர்தலை ரத்துசெய்து பொதுத்தொகுதிதேர்தலையே அமுலுக்குக்கொண்டு வரவேண்டுமென இவ்வொப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. தீண்டாதாருக்குத் தனித்தொகுதி தேர்தலிருப்பது பெரும் கெடுதியை உண்டு பண்ணக்கூடு மெனப்பலர் கருதுகிறார்கள். ஆனால் நான்சம்பந்தப்பட்டவரையில் தீண்டாதாருக்குத்தனித்தொகுதி வேண்டுமென்பதே எனதுஅபிப்பிராயமாகும். அந்தஅபிப்பிராயத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியாது. ஆனால் பெரும்பான்மையான ஸ்தானங்களுள்ள ஒருவகுப்புக்கு தனித்தொகுதி கொடுப்பதால், அதனால் தேசமுன்னேற்றத்திற்குப் பெருந்தடையேற்படுமென்பதை நான்ஒப்புக்கொள்ளுகிறேன். இந்துவகுப்பைச்சார்ந்த தீண்டாதாருக்கு கூட்டுத்தொகுதியேகடைசிமுறையாக இருக்கவேண்டுமென்பதையும் நான் நம்புவதற்குமுடியாது. தேர்தல் முறையாலோ, அல்லது சட்டசபைகளில் ஸ்தானங்கள் பெற்றுவிடுவதாலோ, சமுதாய குறைகளைப்போக்கிவிட முடியாதென்பது எனது அபிப்பிராயம். அதற்கு தற்காலமுள்ள அரசியல் திட்டங்களை அமுலுக்குக்கொண்டுவருவதே சிறந்தவழியாகும். உதாரணமாக இன்றுநாம் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தால் அதிகநன்மை ஏற்படக்கூடு மென்பது எனது நம்பிக்கை. தீண்டாதார் இந்துசமூகத்தின் ஒருபாகமாகயிருந்து, இந்துக்களுடன், கௌரவமான முறையில், அவர்களுக்குரிய சகல உரிமைகளையும் பெறக்கூடிய எந்த விதமான வேறுதிட்டங்களை யோசித்து ஒருமுடிவுக்கு வந்தாலும் அதை நான்ஏற்றுக்கொள்ள சித்தமாயிருக்கிறேன். நெடுங்காலமாக தீண்டாதார்ஜாதி இந்துக்களால் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் இதனால் தங்கள் சுயமதிப்பையும் இழந்துவிட்டார்கள். ஆகவே இப்பொழுது, இந்துக்கள் அவர்களுக்கு சகலஉரிமையும் கொடுத்து தங்களுடன் சேர்த்துக்கொள்ளுகிறோமென்று கூறுவதை அவர்கள் எளிதில் நம்பமுடியாது அதைஅறிந்து கொள்ளவும் அவர்களால் முடியாது. ஆகையால் படிப்படியாய் அவர்கள் தாங்களும் இந்துக்கள், இந்துக்களுடன் சேர்ந்து சகலஉரிமையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் அறியவேண்டும். அவர்கள் கல்வியில் அபிவிருத்தியடைந்து வரவர இந்த உண்மையைதெரிந்து கொள்ளமுடியும். இந்து சமூகத்திலிருந்து பிரிந்துபோவதால் தங்களுக்கு எவ்வளவு கெடுதியேற்படுமென்பதையும் அவர்கள் அப்பொழுது தான் உணருவார்கள் இந்த உண்மையை நீங்கள்யாவரும் நன்றாக மனதிலிறுத்தி அதற்காக நீங்கள்யாவரும் அவசியமான வழியில் உழைக்குமாறு உங்கள் யாவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

—...—

## துறையூரில் கோவில் மூடப்பட்டது.

### சுயமரியாதை இயக்கத்தின் உண்மைவேலை.

இவ்வூர் தேவாங்க குலபெரியார்களால் தொன்றுதொட்டு கொண்டாடிவந்த சௌண்டீஸ்பரி அம்மன் கோவிலுக்கு இவ்வூரில் நடந்த தமிழர் மகாநாட்டின் சுயமரியாதைக் கிளர்ச்சியின் பயனாக வாலிபர்களின் முயற்சியால் சில பெரியார்களின் உண்மைபற்றாலும் குருட்டு நம்பிக்கை எனக்கண்டு ஷை கோவிலுக்குக் கொடுத்துவந்த கட்டளை நிறுத்தப்பட்டதால் கோவில் மூடப்பட்டதாகத் தெரிகிறது. ஷை கோவிலை சித்த வைத்தியசாலைக்கு உபயோகப்படுத்தலாமா எனப் பலர் யோசித்து வருகிறார்கள். குருட்டு நம்பிக்கையுள்ள வைதீகர்கள் ஓலமிடுகிறார்கள். என்று தோழர் ராமசாமி அறிவிக்கிறார்.

# காந்தியாரின் திருவிளையாடல்.

## தீண்டாதாரை இனி "ஹரி பக்தர்கள்" என்று அழைப்பாராம்.

### "ஹிந்து மதம்" அழிந்தாலன்றி தீண்டாமை ஒழியுமா!

### தேசீயப்பத்திரிகைகளின் விளம்பரங்கள்.

(தோழர். அம்பலவாணன்.)

திரு. காந்தி அவர்கள் இந்நாட்டு மக்களின் மூடபக்திக்கேற்றவாறும், மதபக்திக்கேற்றவாறும், தெய்வ பக்திக்கேற்றவாறும் இதுவரை பலவிதத் திருவிளையாடல்கள் செய்து விட்டார். கடைசியாக உண்ணாவிரதமிருந்து உயிர்விடப் போவதாகச் சபதம் செய்த திருவிளையாடல் முடிந்து, உண்ணும் விரதம் கைக்கொண்டு உடல் நலம் பெற்று வருகிறாராம்? இந்த உண்ணாவிரதத்தால் நாட்டில் தீண்டாமை ஒழிந்து விட்டதாகக் கருதுகின்றாரா? டாக்டர் அம்பெத்காரை எப்படியோ ஏமாற்றி விட்டோமென்று கருதுகின்றாரா? என்பதே நமது கேள்வி.

இந்த உண்ணாவிரதத்தில் தோழர் காந்தியவர்கள் உயிர் போய் விடுமென்றே பல தேசபக்தர்கள் பயந்தார்கள். டாக்டர் அம்பெத்கார் அவர்கள் காலடியில் போய் எப்படியாவது காந்தியின் உயிரைக்காப்பாற்றும்படி முறையிட்டார்கள். காந்தியின் உயிரைக் காப்பாற்றியாய் விட்டது. தீண்டாதார்களின் துயரம் இந்நாட்டைவிட்டு ஓட்டியாய் விட்டது. இனி எங்கும் தீண்டாதார்கட்கு சமசுதந்திரம் தான். வடநாட்டுக் கோயில்கள் முழுதும் தீண்டாதார்கட்கு திறந்தாய் விட்டது. காசி ஹிந்துமகாசபை தீண்டாமை ஒழிப்பதை ஒப்புக்கொண்டு விட்டது. களிமண் மாளவியா அவர்கள் தீண்டாதாரை கங்கைக் கரையில் மந்திரத்தால் தீட்டுப் போக்கி பூணூல் போடாமலே ஏற்றுக்கொண்டு விட்டார் என்பனபோன்ற செய்கைகளும் வெளிவந்தாய் விட்டது.

மற்றும் காந்தி அவர்கள் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்த நாள் முதல் அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு உண்ணும் விரதத்தைக் கைக்கொள்ளும் வரை நடந்த நாடக நடைமுறையாவும் பத்திரிலகைகளில் வெளிவந்து விட்டது. அவற்றுள் முக்கியமானது:— தாகூர் அவர்களுடன் கட்டி ஆலிங்கனம் செய்து கொண்டது, மகாதேவதேசாய் பழச்சாற்றைக்கொடுக்கும்போது கை நடுங்கியது, காந்தி பத்திரிகை நிருபரிடம் பொக்கைவாய் பல்லுடன் சிரித்தது, கடவுள் ஆராதனை செய்தது, கீதாஞ்சலியிலுள்ளகீதம்பாடியது, மாமரத்தடியில் கட்டிலில் மிகவும் தளர்ச்சியாகப் படுத்திருந்தது, எம். சி. ராஜாவிற்குப் பேட்டியளித்தது, தந்திகள் வந்து குவிந்தது, சங்கீதத்திற்கு மகிழ்ந்து கைத்தாளம் போட்டு காந்தி தலையாட்டியது, காந்தி உட்கார்ந்திருந்த மாமரத்தின் இலையை மகாஜனங்கள் ஒடித்து பக்தியோடு தலையில் சூடிக்கொண்டது, காந்தியின் உயிரைக்காப்பாற்றும்படி கடவுளிடம் பிரார்த்தனைசெய்யும்படி மகாஜனங்கட்கு ஸ்ரீ ஆச்சாரியார் அறிக்கை வெளியிட்டது. காந்தி ஒரு கைக்குழந்தையுடன் விளையாடியது இன்னோரன்னபிற.

எல்லாவற்றையும்விட மிகச் சிறந்தது, இனி தீண்டாதார்களை காந்தி, "ஹரிபக்தர்கள்" "ஹரி ஜனங்கள்" என்று தான் அழைப்பாராம்? தீண்டாதாருக்கு வந்த விடுதலையே......—விடுதலை காந்தியின் திருவிளையாடல் ஒவ்வொன்றும் கடவுளின் கட்டளையின் மீதேதான் செய்யப்படுகின்றதென்று அடிக்கடி காந்தி கூறுகிறார். தீண்டாமை அடியோடு ஒழியாது போனால் மீண்டும் உண்ணா விரதமிருந்து உயிர்விடப் போவதாகவும் கூறுகிறார். இப்போது தீண்டாமை எதுவரை ஒழிந்திருக்கிறது? தமிழ் நாட்டில் தாண்டவம் புரியும் தீண்டாமையின் கொடுமை காந்திக்குப் பூரணமாகத் தெரியாதென்றே கருதுகின்றோம். தோழர் காந்தி ஒரு மத பக்தர். வைணவ சமயத்தைச்சார்ந்தவர். வர்ணாச்சிரமத்தில் நம்பிக்கையுடையவர். கடவுள் நம்பிக்கையும், புராண மயக்கமும், கீதைப்பைத்தியமும்உடையவர் என்பது அவரது வரலாற்றால் நன்கு விளங்காமல் போகாது. தோழர் காந்திக்கு மத சம்பந்தமான, சமயசம்பந்தமான வரலாற்றைப்பற்றி. வடநாட்டிலுள்ளதும் அவர்கள் மொழியில் உள்ளதுமான கதைமட்டும் தான் தெரியும். தோழர் காந்திக்கு தமிழ் நாட்டிலுள்ள சைவ வைணவ சமயக்கதைகளும், புராணங்களும் தெரியாது. தெரிய அவசியமுமில்லை. தீண்டாதார் முத்திக்குப் போனதாகவும் கடவுளுடன் கலந்து விட்டதாகவும்இங்கு புராணக்கதைகள் நிறையவுண்டு. தீண்டாமையை, மக்களுள் ஜாதி வித்தியாசத்தைப் போக்க பல அவதார புருஷர்கள் தோன்றி உபதேசித்தார்கள். அன்று உபதேசம் செய்தவர்களையும் கடவுள் பொம்மையுடன் சேர்த்து மற்றொரு பொம்மையும் சேர்த்து வைத்துக் கும்பிடுகிறார்கள். தீண்டாமை மட்டும் ஒழிந்தபாடில்லை. மத உணர்ச்சியையும், கடவுள் உணர்ச்சியையும், புராணக்கதைகளையும், வர்ணாச்சிரம நம்பிக்கையையும் வைத்துக்கொண்டு தீண்டாதார்கட்கு 'ஹரிபக்தர்' என்ற பட்டம் சூட்டி எப்படி தீண்டாமையை போக்கிவிடமுடியும்?

தங்கள் நிலைமையும் மிக ஆபத்தாகத்தானிருக்கின்றது. மதத்தையும், கடவுளையும், வர்ணாச்சிரமத்தையும், கீதையையும், ஆன்ம சக்தியையும்பற்றி பேசாமல்போனால் தங்கள் பாடும் மகாத்மாவாக இந்நாட்டில் வாழமுடியாத நிலைமையில்தான் வந்து முடியும் என்பதை நாங்களறிவோம். கல்வியும், பகுத்தறிவுமில்லாத மக்களிடம் மதப்பிரசாரமும், வர்ணாச்சிரமப்பிரசாரமும், கடவுள் பிரசாரமும், புராணப்பிரசாரமும், செய்துகொண்டு தீண்டாமை ஒழிக்கும் பிரச்சாரமும் செய்வதாகச் சொல்வது அர்த்தமுடையதாகாது.

'ஹிந்து மதம்' என்ற ஒன்று உள்ளவரை தீண்டாமை இருந்தே தீரும்' அதனை எவராலும் ஒழிக்க முடியாது, தீண்டாமையை நிலைநாட்டுவதற்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்கின்றேன் என்றுதங்களைப்போல் உயிர் தியாகம் செய்யும் வைதிக வர்ணாச்சிரமப் பார்ப்பனர்கள் இந்நாட்டில் பலருண்டு. எனவே மதம், சாதி, நம்பிக்கையுள்ள வரை தீண்டாமையொழியாது. சிறப்பாக ஹிந்து மதம் அழிந்தாலன்றி தீண்டாமை ஒழியாது. இந்நிலையில் எடுத்தவற்றிற்கெல்லாம் கடவுளையும், மதத்தையும் கூறிக்கொண்டு எத்தனை காந்தி தோன்றி இன்னும் எத்தனை முறை பட்டினி கிடந்து உயிர் விட்டாலும் தீண்டாமை ஒழியாது.

தேசிய பத்திரிகைகள் வேண்டுமானால் பொய்யும் புரட்டான விளம்பரங்களால் தீண்டாதாரை ஏமாற்றலாம் காந்தியைக் கடவுளாக்கி கோவில்கட்டி, கும்பாபிஷேகம் செய்து, உற்சவம் நடத்தி புராணம் எழுதிவைத்து மக்களை ஏமாற்றி அங்கும் பார்ப்பான் தரகனாயிருந்துகொண்டு பணம் பிடுங்கலாம். அதற்குத்தான் காந்தியின் திருவிளையாடல் பயன்படும். அவ்வேலையையும் முறையாகக்குட்டிக்காந்தியான ஸ்ரீ ஆச்சாரியார் ஆரம்பித்துவிட்டார்,

இந்நிலையில் காந்தியின் பெயரால் மக்களிடம் முன்னிருந்த மூடநம்பிக்கைக்கும் குருட்டு பக்திக்கும் பதிலாக நவீன முறையில் மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் மக்களிடம் வளர்க்கப்பட்டு வருகிறது. அதற்குப்பல ஆச்சாரிகளும், பல மாளவியாக்களும் தயாராகவேயிருக்கிறார்கள்.

தோழர் காந்தி அவர்கள் பூரண சுயராஜ்ஜியம் வேண்டி தவம் கிடப்பவர். வட்டமேஜை மகாநாட்டால் பயனில்லையென்று லண்டன் போய் திரும்பி வந்தவர், தம்மால் சாதிப்பூசலை தீர்க்க முடியவில்லையென்று லண்டனில் கூறினவர், டாக்டர் அம்பெத்கார் அவர்களைப்பார்த்து நீ தீண்டாதாருக்குப் பிரதிநிதியல்ல? நானே அவர்கள் பிரதிநிதி என்று கர்ச்சித்தவர், இந்தியா சென்றுசாதிப் பூசலை தீர்ப்பேன் என்று வீரம் பேசினவர், அரசாங்கம்தானாக முடிவு செய்த தனித்தொகுதியில் தலையிட்டு அதை மாற்றவேண்டும் இன்றேல் உயிர் விடப்போகின்றேன் என்றவர், சமரச ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக டாக்டர் அம்பேத்காரப்பாராட்டிப்பேசியவர், எனது உயிரைக்கடவுள் அவசியமென்று கருதினால் அவர் காப்பாற்றுவார், எனக்குப்பரிந்து எவரும் கவலைபடையாதீர்கள், கடவுளின் கட்டளையின்படி நான் நடக்கின்றேன் என்று ஞான உபதேசஞ் செய்தவர், இத்தகையசிறப்புகளும்வாய்ந்த தோழர் காந்தி என்றேனும்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் ஷை நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.



# குடி அரசு.

ஈரோடு 1932அக்டோபர்ீ 2-உ


## உண்ணாவிரதப் பலன்.

—:0:—

திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதமிருந்ததன் பலனாகத் தாழ்த்தப்பட்டோர்க்கு ஏற்பட்டிருந்த தனித்தொகுதித் தேர்தல் முறை ரத்துச்செய்யப்பட்டு விட்டது. புனாவில் இந்துத் தலைவர்கள் என்பவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் என்பவர்களும் கூடிச்செய்து கொண்ட சமரச முடிவை பிரிட்டிஷ் பிரதம மந்திரியவர்கள் ஆட்சேபணையின்றி ஒப்புக்கொண்டு விட்டார். திரு. காந்தியும் தனது உண்ணாவிரதத்தை முடித்து விட்டார்.

திரு. காந்தியவர்கள் உண்ணாவிரதமிருந்ததனாலும், தலைவர்கள் என்பவர்கள் சமரச மகாநாடு கூடி ஒப்பந்தஞ் செய்துகொண்டதனாலும், அவ்வொப்பந்தத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்துக் கொண்டு, தாழ்த்தப்பட்டவர்களின் தனித்தொகுதித் தேர்தல் முறையை ரத்துச் செய்ததனாலும் உண்டான பலன் என்ன என்பதை மாத்திரம்பார்ப்போம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின்படி, தாழ்த்தப்பட்டார்க்கு, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாகாணச் சட்டசபைகளுக்கும் ஏற்பட்டிருந்த மொத்த ஸ்தானங்கள் எழுபத்தொன்று. இந்த எழுபத்தைந்து ஸ்தானங்களுக்கும் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அனைவரும், அந்த வகுப்பினரின் ஓட்டுக்களாலேயே தெரிந்தெடுக்கப் படுவார்களாகையினால், அவர்கள், யாருடைய தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் தங்கள் சமூக நன்மைக்கு உண்மையாகவும், உறுதியாகவும், தைரியமாகவும் போராடலாம். தங்கள் சமூகத்திற்கு எதிராக உள்ள வேறு கூட்டத்தாரின் தயவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய தயவு தாட்சண்யங்களுக்கும் கட்டுப்பட்டிருக்கும் நிலையில் உள்ள நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளைவிட, யாருடைய தயவையும் பொருட்படுத்தாமல் சுயேச்சையாகத் தமது சமூக உரிமைக்குப் போராடும் நிலையில் உள்ள சில பிரதிநிதிகள் இருந்தாலும் போதும் என்பதே நமது அபிப்பிராயம். இதனாலேயே நாம் ஆதிமுதல் தாழ்த்தப்பட்டார்க்குத் தனித்தொகுதித் தேர்தல் முறைதான் வேண்டுமென்றும் கூறிவந்தோம். அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இவ்வாறேகூறிவந்தார்கள். ஆனால் திரு. காந்தியவர்கள் பட்டினி கிடந்ததன் பலனாகத் தாழ்த்தப்பட்டார்க்கு ஏற்பட்டிருந்த இந்தச் சௌகரியம் பலிகொடுக்கப்பட்டு விட்டது.

இனி இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இவ்வொப்பந்தப்படி, இந்தியா முழுவதுமுள்ள எல்லா மாகாணச் சட்டசபைகளுக்கும், பொதுத்தொகுதியின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மொத்த ஸ்தானங்களின் எண்ணிக்கை நூற்றுநாற்பத்தெட்டாகும். இந்த நூற்று நாற்பத்தெட்டு ஸ்தானங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் நூற்று நாற்பத்தெட்டு பிரதிநிதிகளும், இந்துக்கள் ஓட்டினாலும் தாழ்த்தப்பட்டார்களின் ஓட்டினாலும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இதில் ஒவ்வொரு ஸ்தானங்களுக்கும், அபேட்சகராக நான்கு பிரதிநிதிகளே முன்வரலாம். இந்த நான்கு பிரதிநிதிகளும், முதலில் தாழ்த்தப்பட்ட வகுப்பு ஓட்டர்களால் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிறகு அவர்கள் பொதுத்தொகுதியில் போட்டிபோட வேண்டும்.

இவ்வாறு தாழ்த்தப்பட்டார்க்கு முன்னிருந்ததைக்காட்டிலும் இரண்டு பங்கு ஸ்தானங்களுக்கு மேல் அதிகமானஸ்தானங்கள் ஏற்பட்டு விட்டதனாலும், பூர்வாங்கத் தேர்தல்முறைஏற்பட்டிருப்பதனாலும் தனித்தொகுதியைவிட அதிக சௌகரியம் ஏற்பட்டு விட்டதென்று தேசியப் பத்திரிகைகள் என்பனவெல்லாம் ஒரேயடியாக ஆர்ப்பாட்டம்புரிகின்றன. ஆனால் உண்மையில் எவ்வளவு ஸ்தானங்கள் அதிகப்பட்டாலும் இதனால் தனித்தொகுதியைவிட அச்சமூகத்திற்கு ஒன்றும் நன்மையுண்டாகி விட வழியில்லை என்பதில் சந்தேகமில்லை. டாக்டர் அம்பெட்காரின் பிடிவாதத்தினால் பூர்வாங்கத் தேர்தல் முறை ஏற்பட்டிருப்பது ஒன்று தான், சிலராவது, அச்சமூகத்தினரின் நம்பிக்க்குப்பாத்திரமுள்ள பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

தாழ்த்தப்பட்டவர்களில்வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்தாலும் கூட, உயர்ந்த ஜாதி இந்துக்களின் ஓட்டர்கள் தொகையே அதிகமாக இருக்கும். இந்நிலையில், தாழ்த்தப்பட்டவர்களாலேயே பூர்வாங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுத் தொகுதியில் நிறுத்தப்படும் நான்கு அபேட்சகர்களில் யார், உயர்ந்த ஜாதி இந்துக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிறார்களோ அவர்கள் தான் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியும். முற்றும் தாழ்த்தப்பட்டார் உரிமைக்கு அஞ்சாமல் போராடும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படமுடியாது. உதாரணமாக, ஒரு ஸ்தானத்திற்கு நடைபெறவேண்டிய பூர்வாங்கத் தேர்தலில், ராவ்பகதூர், சீனிவாசன், டாக்டர் அம்பெட்கார், திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை, ஒரு வெற்றிவேலு, இன்னுஞ் சிலர் போட்டி போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். இவர்களில் முதல் மூவரும், அவ்வகுப்பினரின் மெஜாரிட்டியான ஓட்டர்களால் தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. நான்காவதாக, உள்ள வெற்றிவேலு என்பவரிடம் அச்சமூக மக்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், இந்து சமூகத்தைச் சேர்ந்த பெரிய மிராசுதார்கள், அய்யர், அய்யங்கார்கள் முதலியவர்களின் முயற்சியால் அவர் நான்காவது அபேட்சகராகத்தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். இவ்வாறு பூர்வாங்கத் தேர்தலில், தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் முழு ஆதரவோடும் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராவ்பகதூர் சீனிவாசன், டாக்டர் அம்பெட்கார், திரு. வி. ஐ. முனிசாமி பிள்ளை ஆகியவர்கள் இந்து மிராசுதாரர்கள் அய்யர், அய்யங்கார்கள், ஆகியவர்களின் சொல்லுக்குத் தாளம் போடும் வெற்றிவேலு, ஆகிய நால்வரும் ஒரு ஸ்தானத்திற்குப் போட்டி போடுவார்களானால் இவர்களில் யார் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்என்று கேட்கின்றோம் பணக்கார மிராசுதார்களின் சொல்லையும், அய்யர், அய்யங்கார்களின் சொல்லையும் கைகட்டி, வாய் பொத்திக் குனிந்து நின்று கேட்டு அதன்படி நடக்கத்தயாராக இருக்கும் வெற்றிவேலு என்பவரே தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை யார் மறுக்க முடியும்? ஆகவே இத்தகைய பிரதிநிதிகளாகவே சட்டசபைக்கு வந்து சேர்வார்களாயின் அவர்களால் அச்சமூகத்திற்கு என்ன நன்மை உண்டாகிவிட முடியும்? இத்தகைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருந்தால் தான் என்ன?

இப்படியில்லாமல் பூர்வாங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் நான்கு பிரதிநிதிகளும் அச்சமூகத்தின் நம்பிக்கைக்கும் பாத்திரமுடைய பிரதிநிதிகளாகவே தேர்தெடுக்கப்பட்டால் தான் பொதுத்தொகுதியில் போட்டி போட்டு வெற்றி பெறும் பிரதிநிதி அச்சமூகத்தின் உண்மையான பிரதிநிதியாக இருக்க முடியும். இவ்வாறே இந்த 148 ஸ்தானங்களுக்கும் பூர்வாங்கத்தேர்தல் நடத்தினாலும்அவைகளுக்குஅபேட்சகர்களாக நின்று வெற்றி பெறும் 592 அபேட்சகர்களும் அச்சமூகத்தின் நம்பிக்கைக்குப பாத்திரமுடையவர்களாகத்தான் இருப்பார்களென்று கூற முடியாது. ஆகையால் புதிய தேர்தல் முறையின்படி, தாழ்த்தப்பட்டார் சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளாக ஒரு சில பிரதிநிதிகளாவது தேர்ந்தெடுக்கப் படுகிறார்களோ இல்லையோ என்பது சந்தேகம் என்றுதான் கூறுவோம். இக்காரணங்களால் தான் தனித்தொகுதித் தேர்தல் முறையைவிடக் கூட்டுத்தொகுதித் தேர்தல்முறை எந்த வகையிலும் சிறந்ததல்லஎன்றுகூறுகின்றோம். தாழ்த்தப்பட்டசமூகத்தினரும் கூறுகின்றார்கள்.

ஆயினும், பூர்வாங்கத்தேர்தல் முறையை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் உண்மையுடன் போராடக்கூடிய சில பிரதிநிதிகளாவது சட்டசபைக்கு வரக்கூடும் என்ற நம்பிக்கைக்கு இடமாக இவ்வொப்பந்தமாவது ஏற்பட்டது பற்றிச் சிறிது ஆறுதலடைகின்றோம். இதன் மூலம் திரு. காந்தியவர்களின் பிராணத்தியாகத்தைத்தடு

த்த டாக்டர் அம்பெத்கார், சர். சாப்ரு, திரு. ஜெயகர் முதலியவர்களின் முயற்சியையும் பாராட்டுகின்றோம், ஆனால் திரு. காந்தியவர்களின் பட்டினியின் மூலம், தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சட்டசபைப் பிரதிநிதித்துவத்தில் ஏற்பட்டிருந்த நன்மையில் முக்கால் பாகம் நாசமாக்கப்பட்டது என்பதையும் கூறாமல் இருக்க முடியவில்லை.

அடுத்தபடியாக இவ்வுண்ணாவிரதத்தின் மூலம் ஏற்பட்ட பலன் என்ன என்பதைப்பார்ப்போம். திரு. காந்தியவர்கள், எதைச்செய்தாலும், எதைப்பேசினாலும், "கடவுள் கட்டளை" "கடவுள் அபிப்பிராயம்" என்ற பாடம் படிக்கின்றனவர் என்பது நமக்கு புதிய விஷயமல்ல. நமது நாட்டில் வாழும் குருட்டு நம்பிக்கையுள்ள பாமர மக்களையெல்லாம் ஏமாற்றவேண்டுமானால், "கடவுளை"யும், "மதத்தை,"யும் இழுத்தால்தான் முடியும் என்பது திரு, காந்திவர்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். மனிதனுடைய செய்கைக்கும், அபிப்பிராயத்திற்கும் மதிப்புக்கொடுக்கும் அறிவு இன்னும் நமது மக்களுக்கு உண்டாகவில்லை. ஆகையால், "எனது செய்கை" "எனது அபிப்பிராயம்" என்று சொல்லி யார் எதைச் செய்தாலும், சொன்னாலும் அவைகள் எவ்வளவு உண்மையாயிருந்தாலும், நன்மையுண்டாக்கக் கூடியவைகளாயிருந்தாலும், அவைகளுக்கு நமது தேசத்தில் கௌரவம் ஏற்படுவதில்லை. ஆகையால் தான் திரு. காந்தியார் எதையும் கடவுள் தலையில் போட்டுப் பாமர மக்களை ஏமாற்றுகிறார் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. ஆகவே, வழக்கப்படி, உண்ணாவிரதத்திற்கும் "கடவுளை" இழுத்து விட்டார்.

அன்றியும், தமது உண்ணாவிரதத்தின் நோக்கம், தனித்தொகுதியை ரத்துச் செய்வது மாத்திரமன்று, தாழ்த்தப்பட்டார்க்குத் தற்போதுள்ள சமூகத்தடைகளையெல்லாம் ஒழித்து அவர்களையும் இந்து சமூகத்துடன் ஒன்றுபடச் செய்யவேண்டும் என்று நன்றாக வற்புறுத்திக்கூறினார். இதனால், பலர் அச்சமூகத்தார்க்குக் கோயில் பிரவேச உரிமை அளிக்கவும், மற்றும், குளம், கிணறு, பள்ளிக்கூடம் முதலியவைகளில் சம உரிமை அளிக்கவும் முயற்சி செய்தனர். இம்முயற்சியும தீவிரமாக நடந்தது வடநாட்டிலேயாகும். தென்னாட்டில் அவ்வளவு மும்முரமாக நடைபெறவில்லை. ஆனால் பலவிடங்களில் உபவாசங்களும், கோயில்களில் பூசைகளும், கூட்டங்களில் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன. இவைகளின் மூலம். பாமர மக்களை, "உபவாசம்" "பூசை" "பிரார்த்தனை" முதலியவைகளில் தெய்வத்தன்மையிருப்பதாகவும், அவைகளின் மூலம் காரியசித்திகள் உண்டு என்பதாகவும் நம்பச்செய்யப்பட்டன. இத்தகைய முட்டாள் தனத்தால் நமது மக்களை இன்று சோம்பேரிகளாகவும், மூடர்களாகவும் அடிமைகளாகவும், ஆக்கிவைத்திருக்கின்றன என்பதை அறிந்திருந்தும், காந்தி பக்தர்கள் இப்பிரசாரம் பண்ணியது அயோக்கியத்தனத்தைத்தவிர வேறல்ல என்றே கூறுவோம். ஆகவே, திரு. காந்தியின் விரதத்தால் நமதுநாட்டுக்குக் கிடைத்த இரண்டாவது பலன், "உபவாசம்" "பூசை" "பிரார்த்தனை" என்னும் சோம்பேரித்தனப் பிரச்சாரமும், முட்டாள் தனப்பிரசாரமும், குருட்டு நம்பிக்கைப் பிரச்சாரமும் செய்யப்பட்டதுதான்.

திரு. காந்தியின் விருப்பத்தின் படியும், திரு. ராஜகோபாலாச்சாரியின் அறிக்கையின்படியும், உபவாசமும், பிரார்த்தனையும் செய்த நமது நாட்டுப் பார்ப்பனர்களில் யாராவது தீண்டாதார்க்கு என்ன உபகாரம் பண்ணினார்கள் என்று கேட்கின்றோம். திரு. காந்தி இந்து மதத்தைக்காப்பாற்றப்பாடுபடுகிறார் என்னும் எண்ணத்துடன் அவர்பொருட்டு உபவாசமும், பிரார்த்தனையும் செய்தார்களே யொழிய தீண்டாதார் துயரம் அகலவேண்டும் என்னும் கருத்துடன் இவைகளைச் செய்த பார்ப்பனர் ஒருவரேனும் நமது நாட்டில் உண்டா?

தனித்தொகுதியை ஒழிக்கும் விஷயத்தில் உயிரைவிடத் துணிந்த திரு. காந்தியின் பொருட்டு, நாடெங்கும், பத்திரிகைகளும், காந்திபக்தர்களும் பிரசாரமும், விளம்பரமும் பண்ணியதில் பதினாயிரத்தில் ஒரு பங்காவது, தீண்டாமையை ஒழிக்க உண்ணாவிரதமிருக்கும் திரு. கேளப்பன் பொருட்டுச் செய்யப்படுகிறதா என்று பாருங்கள். குருவாயூர் கோயிலில் தாழ்த்தப்பட்டோரை அனுமதித்தாலொழிய தனது உண்ணாவிரதத்தை நிறுத்துவதில்லையெனச்சென்ற 20-9-32 முதல் திரு. கேளப்பன் அவர்கள் உண்ணாவிரதமிருந்து வருகிறார். இதற்காக எத்தனை பேர், உபவாசமும், பிரார்த்தனையும் செய்யப்போகிறார்கள்? இதைக்கொண்டே தீண்டாமையை உண்மையாக விலக்கும் விஷயத்தில் நமது நாட்டு உயர்ந்தசாதி மக்களுக்கு எவ்வளவு கவலையிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் திரு. காந்தியவர்கள், உண்ணாவிரதத்தை முடித்தபின் கூறியுள்ள அபிப்பிராயத்திலும், அதற்கு முன் குறிப்பிட்டது போலவே, "தீண்டாமையை குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் மும்முரமாக வேலை செய்து ஒழிக்காவிட்டால் மீண்டும் உண்ணாவிரதத்தைக் கைக்கொள்ளுவேன்" என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு உண்ணாவிரதமிருப்பாரானால், அப்பொழுது, தற்சமயம், திரு. கேளப்பன் அவர்களின் உண்ணாவிரதத்தின் பொருட்டு நமது நாட்டுப் பார்ப்பனர்களும், காந்தி பக்தர்களும் எவ்வளவு கவலையெடுத்துக்கொள்ளுகிறார்களோ அவ்வளவு கவலைதான் எடுத்துக் கொள்ளுவார்கள் என்று உறுதியாகக்கூறுகின்றோம்.

நாம் சென்றவாரத்தில் குறிப்பிட்டிருந்தது போலவே ஒரு பார்ப்பனராவது திரு. காந்தியிடம் அனுதாபங்காட்டமாட்டார் என்பது உண்மை. இப்பொழுதே தீண்டாமை விலக்குக்கு எதிர்ப்பிரசாரங்களும் கண்டனங்களும் புறப்பட்டு விட்டன. இன்னும் புறப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையால் இனி திரு. காந்தியை எந்தப்பார்ப்பனரும் லட்சியம் பண்ணமாட்டார்கள் எனபது நிச்சயம்.

ஆகையால் உண்மையிலேயே தீண்டாதார்க்கு விமோசனம் உண்டாகவேண்டுமானால் அவர்கள் இந்துக்களை நம்பியிருப்பதனாலாவது அவர்களோடு சேர்ந்திருப்பதனாலாவது முடியாது என்பதை அறியவேண்டும்.

கேவலம் கோவில் பிரவேசத்தால் மாத்திரம் அவர்கள் நன்மையடைந்து விட முடியாது. கோயில்களின் மேல் பக்திகொண்டு நம்பிக்கை வைத்துக்கொண்டு அவைகளில் பிரவேசிக்கும் உரிமைமாத்திரம் பெறுவார்களாயின் நன்மைக்குப்பதிலாகத் தற்பொழுது இருப்பதைவிட அவர்களுக்கு இன்னும் அதிக தீமையே உண்டாகும் என்பதில் தடையில்லை. கொஞ்சநஞ்சம் சம்பாதிக்கும் பொருளையும் கோயில் உற்சவங்களுக்குச்செல்லுவதன் மூலமும் 'அர்ச்சனைகள்' 'பூஜைகள்' என்பனவைகளின் பெயரால் செலவழிப்பதன் மூலமும் இன்னும் வறுமையடைவார்களென்பது திண்ணம்.

ஆகையால் 'பொதுச்சொத்தாகிய கோயிலில் நமக்கும் செல்ல உரிமையிருக்கவேண்டும்' என்னும் எண்ணத்துடன் மாத்திரம் கோயில் பிரவேசத்தை ஆதரிக்கவேண்டும் என்றுதான் நாம் தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

நிற்க திரு. காந்தியின் உண்ணாவிரதத்தின் மூலம் தீண்டாமை விலக்கு விஷயத்தில் வெற்றி ஏற்பட்டதா என்று பார்த்தால் நமது தமிழ்நாட்டைப்பொறுத்த வரையிலும் ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

இனி திரு. காந்தியின் வெற்றி என்று எல்லோரும் பிரசாரம் பண்ணுவதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்று பார்ப்போம். அவர் இதற்கு முன் தாழ்த்தப்பட்டார்களும் பொதுத்தொகுதியின் மூலம் போட்டிபோட்டுச் சட்டசபைகளுக்கு வரவேண்டும் என்றுகூறினாரேயொழிய பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதைக்கூட ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுதோ, பொதுத்தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதையும் அதற்குமுன்கூட தனித்தொகுதித்தேர்தல் போலவேபூர்வாங்கத்தேர்தல் நடத்தும்முறையையும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவேஇதில் திரு.காந்தியின் கொள்கைக்கு வெற்றி ஏதாவது இருக்கிறதா? என்று பாருங்கள். தனித்தொகுதித் தேர்தல் முறையை ரத்துச்செய்த வெற்றியை அவர் 'கடவுள் சக்தி' யால் பெற்றார் 'ஆத்ம சக்தி' யால் பெற்றார் என்று கூறுவதும் புரட்டு என்று சொல்வோம். 'கடவுள் சக்தி' யும் 'ஆத்ம சக்தி'யும் இருந்தால் இவர் ஏன் பட்டினி கிடந்து பிடிவாதம் பண்ணவேண்டும்? பட்டினிகிடந்து பிடிவாதம் பண்ணினால்தான் 'கடவுள் சக்தி' யும், 'ஆத்மசக்தி'யும் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துமா? ஆகையால் 'கடவுள் சக்தி' 'ஆத்மசக்தி' என்று பிரசாரம் பண்ணுவதெல்லாம் மக்களை ஏமாற்றவேண்டிச் செய்யப்படும் பிரச்சாரம் என்றே சொல்லுவோம்.

ஆகையால் திரு. காந்தியின் உண்ணாவிரதத்தால் நமது நாட்டுக்கு ஏற்பட்டபலன் தீண்டாதார்களின் சட்டசபைப்பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டதும், உபவாசம் பிரார்த்தனை முதலிய மூடநம்பிக்கைகளைப் பிரசாரம் பண்ணப்பட்டதும்தான் என்று அறியலாம்.

---

# குலசேகரம் பட்டினம்.

## தீண்டாமை ஒழிக்க வழிகாட்டுகிறது.

### மந்திரிகள் விஜயம் செய்தார்கள்.

சென்னை அரசாங்க அபிவிருத்தி இலாக்கா மாந்திரி கனம் பி. டி. ராஜன் பி. ஏ. அவர்கள் எழுதுவதாவது:—

திரு. அரம்வளர்த்த நாதம் பிள்ளை அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி நான் காவேரிபட்டிணம் தாயம்மாள் ஞாபகார்த்த பாடசாலையைச் சென்று பார்வையிட்டேன். வகுப்புகளையும், பிள்ளைகள் விளையாடுமிடங்களையும் பார்வையிட்டேன். மாணவிகள் உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் காணப்பட்டனர். நாட்டுப்புறங்களில் ஒன்றாகிய இவ்வூரில் வேளாளர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களே அதிகமாயிருப்பதால், எத்தகைய சீர்திருத்தத்தையும் எதிர்பார்ப்பது முடியாததே. ஆனால் நல்ல வேளையாக இங்குள்ள கனவான்கள் பரந்த நோக்கமும், முறபோக்கான எண்ணங்களும் உள்ளவர்களாகையினால் எவ்வித ஜாதி வித்தியாசமுமின்றி பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தீண்டாமையைப்பற்றி அரசியல் கட்சிகள் விவாதிக்கத் தொடங்கியதற்கு முன்னரே இங்கு இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டுளது. இப்பாடசாலையின் நிர்வாகஸ்தர்களின் தைரியத்தினால் ஆதிதிராவிடப் பெண்கள் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதல்லாமல் ஹிந்து மாணவிகளைப்போன்றே எல்லாவித சுதந்திரங்களோடும்சௌக்கியமாயும்குறைகளற்றும் இருந்து வருகின்றார்கள். தாழ்ந்த ஜாதியைச்சேர்ந்த சிலரும் உபாத்தியாயர்களாக உத்தியோகம் பார்த்து வருகிறார்கள்.

கல்வி எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. சங்கீதம, நாடகம் முதலியன கண்டு சந்தோஷித்தோம். எல்லாப் பெருமையும் நிர்வாகஸ்தர்களுக்கும் உபாத்திமார்களுக்கும் உரியதாகும் சென்னை மாகாணமெங்கும் இது போன்ற ஸ்தாபனங்கள் எண்ணற்று இருக்கவேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இதன் ஸ்தாபகரையும், நிர்வாகஸ்தர்களையும் பாராட்டுகிறேன்.

சென்னை அரசாங்க முதன் மந்திரி கனம் பி. முனுசாமி நாயுடு அவர்களும், கல்வி மந்திரி கனம் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்களும் இப்பாடசாலையைப் பற்றிப் புகழ்ந்து 12-9-30 தேதி எழுதியுள்ளார்கள்.

இந்தப் பாடசாலை 1904 வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு இலவசக்கல்வியளிக்கும்உயர்தர எலிமெண்டரி பாடசாலை. இடைவேளையில் தங்கள் வாசஸ்தலம் அதிக தூரமிருப்பதால் சாப்பிட்டு திரும்பிவர முடியாத அநேக மாணவிகளுக்கு, ஆதிதிராவிடர்கள் உள்பட, இலவசஉணவளிக்கப்படுகிறது. வெளியிலிருந்துவரும் மாணவிகளுக்குஇலவச சாப்பாடும் ஜாகையும் அளிக்கப்படுகிறது.

---

## ஈ. வெ. ராமசாமிக்கு வரவேற்பு.

### தீண்டாமையொழிக்க முதற்படி.

ஈரோடு முனிசிபாலிடியார் தீர்மானம்.

சென்ற 30—9—32ந்தேதி கூடிய ஈரோடு முனிசிபல் சபைக் கூட்டத்தில்,

"ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் சென்று திரும்பும் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்க வேண்டு" மென்ற சேர்மன் ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுத்சாகிப் பகதூர் அவர்களது குறிப்பு ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

2. "ஆதிதிராவிடர்கள் உட்பட ஜாதி மத வித்தியாசம் பாராட்டும்எந்தகாப்பிகிளப்புக்கோ அல்லதுஒட்டலுக்கோ லைசென்ஸ்கொடுக்கக்கூடாதென இக்கவுன்சிலார் தீர்மானிக்கிறார்கள்" என்ற தீர்மானத்தை திரு. கேசவலால் காளிதாஸ் சேட் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு திரு. எம். சிக்கையா அளர்களால் ஆமோதிக்கப்பட்டு திருவாளர்கள் சி. ரங்கராஜு செட்டியார், வி. மாரிமுத்து முதலியோர்களால் ஆதரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

---

### ஆர். கே. ஷண்முகம்,

உயர் திரு ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல் ஏ. அவர்கள் இங்கிலாந்திலிருந்து இம்மாதம் 5ந் தேதி பமபாய் மார்க்கமாய் சென்னைவருகிறாரெனத் தெரிகிறது.

---

### ஈரோடு தேர்தல்.

#### K. A. ஷேக்தாவுத் சாகிப் வெற்றி.

ஈரோடு முனிசிபல் சேர்மன் ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுத் சாகிப் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கும், ஈரோடு தாலூகா போர்டுக்கும் அங்கத்தினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

### சுயமரியாதைப் பொதுக் கூட்டம்.

20-9-32 மாலை 5-30மணிக்கு நாகை டவுன் போலீஸ் ஸ்டேஷன் மைதானத்தில் சுயமரியாதைப் பொதுக் கூட்டமொன்று கூடியது. கூட்டத்திற்கு ஆர். வி. கோபால் தலைமை வகித்து முகவுரையாக திரு 'காந்தியின் கிளர்ச்சி' என்பது பற்றி சிறிது நேரம் பேசியபின் தோழர்கள் வி. சாமிநாதன், எம். ஏ. கோவிந்தசாமி, கே. முருகேசன், எஸ். பி. கிருஷ்ணன் முதலியவர்கள் "தற்கால நிலைமை" என்பதுபற்றி பேசினார்கள்.

பிறகு பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி தோழர் காந்தியின் சபதத்தைக் குறித்து கூட்டத்திலுள்ளோர் அதன்புரட்டை அறிந்துகொள்ளும் விதத்தில் மிக அழகாக பேசியதோடு இடை இடையே கூட்டத்திலுள்ளவர்களின் கரகோஷத்தைப்பெற்றார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு சங்க காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

---

### மரண அறிக்கை.

இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா ஆதிதிராவிட சங்கத்தின்கௌரவக்காரியதரிசியும், சுயமரியாதை இளைஞனும் தற்காலம்,மலாய் நாட்டிலிருப்ப வருமாகிய தோழர் என். வி. சங்கிலியவர்களின் பத்தினியாகிய அழகம்மாள் (18-வயது) தனது ஒன்றரை வருட குழந்தையும், துணைவனையும், சுற்றத்தாரையும் விட்டு 12—.8—32 வெள்ளிகிழ மரணமடைந்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

### புரோகிதமற்ற கிரகப்பிரவேசம்.

திசையன் விளையைச்சேர்ந்த செல்வமருதூரில் வணிக செட்டியார் குலத்தில் பாலையா செட்டியார் என்பவர் தன் இல்வாழ்க்கைக்காக ஒரு புது வீடு கட்டி ஷை வீடு கிரகப்பிரவேசத்தன்று சுயமரியாதை முறைப்படி விசேசம் நடைபெற்றதெனஒரு நிருபர் எழுதுகிறார்.

---


1932-௵ அக்டோபர் மாதம் 8, 9-ந்தேதி
சனி, ஞாயிறுகளில்

**தஞ்சாவூர் சுதர்சனமஹாலில்**

சென்னை மாகாண

## பார்ப்பனரல்லாதாரின்
## 12-வது மகாநாடு

**நடைபெறும்.**

மகாநாட்டுத்தலைவர்
உயர்திரு. பொப்பிலி மகாராஜா அவர்கள்.

வரவேற்புத்தலைவர்
உயர்திரு. என். ஆர். சாமியப்பா அவர்கள்,

பார்ப்பனரல்லாதார் அனைவரும் வருக.

ஐ. குமாரசாமி பி. ஏ.,
டாக்டர் தாஜூடின் எம். எல். சி.,
காரியதரிசிகள்.

9[ம் பக்கத்தொடர்ச்சி]

ஒரு நாள் எப்படியாகிலும் சாக வேண்டியவர்தான் இவர் வணங்கும் கடவுள் சாகாமல் வைக்கப் போவதில்லை சாப்பிடாமலிருக்கச் சொல்லப்போவதில்லை.

காந்திபிடம் வந்து அடிக்கடி கட்டளையிட்டுப்போகும் 'கடவுள்' இந்நாட்டு மக்கட்கு சுயராஜிய முண்டா? தீண்டாமை ஒழியுமா? என்பதையும் கூறிவிட்டால் காந்தியும் பிரதேச பக்தர்களும் கஷ்டமடைய தேவையில்லை.

---

## நாகை சுயமரியாதைச் சங்கம்.

---

ஷை சங்கத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் நடைபெற்றது அது சமயம் "சமீபத்தில் வரப்போகும் சரஸ்வதிபூஜைசம்பந்தமாக இச்சங்கத்திஞதரவில் ஒரு வெளியீடுவெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது" அன்றே இச்சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் இச்சங்கத்தலைவரின் தலைமையில் கூடியது. பல தோழர்கள் சுயமரியாதைப்பாடல்கள் பாடினுர்கள் "கோவிலால் மக்களுக்கு நன்மையுண்டா" என்பதுபற்றி பேசினுர்கள்.

தலைவர்முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

---

## நாகை தாலுக்காவைச் சேர்ந்த கீழ்வேளூரில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

---

21—9—32ந் தேதி மாலை 5 30 மணிக்கு இவ்வூரில் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர்கள் பட்டுக்கோட்டை கே. வி, அழகர்சாமி, பட்டுக்கோட்டை டேவிஸ் பி. ஏ., எம். ஏ., கோவிந்தசாமி, வி. சாமிநாதன், எஸ். பி. கிருஷ்ணன் முவலியவர்கள் சுயமரியாதை இயக்கசம்பந்தமாக சொற்பொழிவாற்றினுர்கள்.

தலைவர் முடிவுரையோடு கூட்டம் இரவு 9 மணிக்கு கலைந்தது.

---

## அந்தணர்ப்பேட்டையில் பொதுக்கூட்டம்.

---

நாகை அந்தணர்ப்பேட்டையில் தோழர் வி. சாமிநாதன் அவர்கள் தலைமையில் சுயமரியாதைப் பொதுக் கூட்டம் மாலை 5மணிக்கு நடைபெற்றது. கூட்டத்திற்கு மஞ்சக்கொல்லை, புத்தூர், நாகை முதலிய விடங்களிலிருந்து சுமார் 120 பேர்கள் வரை கூட்டத்தில் குழுமியிருந்தனர்.

அவ்வமயம் தோழர்கள் குஞ்சு, பி. அழகர்சாமி, எம். ஏ. கோவிந்தசாமி முதலியவர்களால் சுயமரியாதைக் கீதம் பாடப்பெற்று பிறகு தோழர்கள் எம். கோவிந்தராஜூ ஆர். வி. கோபால், எம். ஆர். பதி கே. முருகேசன் முதலியவர்களால் சமுதாய சீர்திருத்தம் என்பது பற்றி ஒவ்வொருவரும் அரை மணி நேரம் பொதுமக்கள் உள்ளத்தை கவரும் முறையில் பேசினுர்கள். முடிவுரையாக தலைவர் அரை மணிநேரம் நாட்டின் தற்கால நிலைமையைப்பற்றி பேசியபின் இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்).

---

## ஆம்பூர் ஆதிதிராவிடர் கூட்டம்.

---

28—9—32ந்தேதி ஆம்பூர் ஆதிதிராவிட அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் யூனியன் போர்டு மெம்பர் திரு. பெருமாள் மேஸ்திரி தலைமை தலைமையில் கூடியது அது சமயம் பல அன்பர்கள் 'தீண்டாமை' விஷயமாகவும், காந்தியின் சூழ்ச்சிகளைப் பற்றியும் பேசியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறுர்.

---

## சமுத்திரம் ஆதிதிராவிடர் கூட்டம்.

---

28—9—32ந்தேதி திருச்சங்கோடு தாலூக்கா சமுத்திரம் ஆதிதிராவிடர் சங்கக்கூட்டம் கூடியது. திரு. வையாபுரி தலைமை வகித்தார். அதுசமயம் பல அன்பர்கள் 'தீண்டாமை' விஷயமாகப்பேசினுர்கள், இன்னும் பல அரிய விஷயங்கள் பேசியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்.)

## கூத்தூர் மரணம்.

---

கூத்தூர் வைக்கம் வீரர் இலவச வாசகசாலையின் ஸ்தாபகர் திரு எஸ். முத்துகிருஷ்ணன் அவர்களின் சகோதரி 11 வயதுள்ள மிஸ் மீஞகூி அம்மாள் அவர்கள் நிமோனியா விஷஜுரத்தால் மிக கஷ்டப் பட்டு 22-9-32ல் மரணமடைந்துவிட்டார்கள்.

ஷையாரின் மனைவியார் குளிர் ஜுரத்தால் கஷ்டப்படுகிருர் என்றும் நாகை டாக்டர் சிகிச்சை செய்து வருகிருர் என்றும் ஒரு நிருபர்எழுதுகிருர்.

---


## பெண் தேவை.

---

இந்து மதத்தைச் சேர்ந்த கல்வி கற்ற பெண் தேவை. விபரத்திற் கெழுதவும்.

ஓரியண்டல்
பேவரிட் கம்பெனி
உல்ஹவுஸ் கோயமுத்தூர்.



# வெள்ளை வெட்டைக்கு

## சந்தனுதி மாத்திரை பிரமேகநெய்

சாப்பிட்ட 12-மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை, வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொறுக்க முடியாத நீர் குத்தல், நீர்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரியபையில் எற்படும்ரணம், கொதிப்பு முதலிய நீதாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்,

சந்தனுதி மாத்திரை, பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5 பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.



## மகத்தான சகாய விற்பனை.

ரூ. 2—14—0 க்கு 6 குப்பிகள் ஒட்டோ வாசனைத் திரவியமும், 3 உருளோசுகளும் தவிர 92 சாமான்கள் இனும்.




பெயர்பெற்ற எமது ஒட்டோ மோடியா சென்ட் 6 குப்பிகள் ஒரே நேரத்தில் வாங்க ரூபாய் 2-14-0செலவு செய்தால்போலிரெயில்வேடைம்பாக்கெட் உருளோஸ் 1, 5 வருட உத்தரவாதமுள்ள திறமான இயந்திரங்களோடு கூடிய "பி" அசல் கெடிகாரம் 1, தங்க முலாம் பூசின போலிரிஸ்ட் வாச் 1, 14K ரோல்ட் கோல்ட் கில்ட் நிப்புள்ள பவுண்டன் பேனு 1, மோதிரம் 1, இன்னும் அநேக சாமான்கள் இனுமாகக் கொடுக்கப்படும். விலை ரூபாய் 2-14-0 மட்டும்தான். பாக்கிங் தபால் செலவு சதம் 63 பிரத்தியேகம்.

The American Commercial Stores
Post Box, No. 12210, Calcutta,


## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

களைக்கொண்டுவந்து சேர்த்து நகர வாசிகளையெல்லாம் கொன்று தண்டிப்பதாக பயமுறுத்தியதாகவும் கூறி இதை அப்பட்டணக்காரன்நகரில் யாவரிடமும் அறிவித்து விட்டான். பல கல்வியறிவுடைய கனவான்களும் கூட இவ்விஷயத்தைப் பிரமாதமாகக் கருதித்தங்கள் வீட்டில் சமையல் செய்யாமல் தடுத்துப்பட்டினி கிடந்தார்கள் (திராவிடன்)

"இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எமது ஊரிற்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரில் ஒரு பூசனிச்செடியில் ஒரு பூசனிக்காய் அதிகப்பருமனுள்ளதாயிருந்ததாகவும் ஒரு நாள் திடீரென்று அக்காய்வெடித்தபொழுது இரண்டுசிறுவர்கள் தோன்றியதாகவும், அச்சிறுவர்கள் இரவில் நடுச்சாமத்தில் அழுதுகொண்டு ஊருக்குள்வந்து கதவுகளைத் தட்டுவதாகவும், எந்த வீட்டுக்கதவுகளைத்தட்டுகின்றதோ அவ்வீட்டில் ஒருவித காய்ச்சல்தோன்றி எல்லோரும் செத்துப்போவதாகவும், ஆனால் யார்வீட்டின் கதவுகளில் வைஷ்ணவர்களின்குறியாகிய 'ஒய்'மார்க்காகிய ராமம் போடப்பட்டிருக்கிறதோ அவ்வீட்டின் கதவைத் தட்டுவதிகிடையாதென்று ஊரெல்லாம் பிரஸ்தாபம் பெருகவே, ஊரிலுள்ள ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்துவர்கள் வீடெல்லாம் இவ்வித அடையாளம் போடப்பட்டது, இவ்விதக்கோலம் பலகிராமங்களிலும் பரவினது"

இவைகளும் இன்னும் பலசெயல்களும் நாம் நேரிலும் பத்திரிகை வாயிலாகவும் கண்டும், கேட்டும், படித்தும் வருகின்றோம். இன்னும் பலர் கனவில் காணும் செயல்களெல்லாம் கடவுளோ அன்றி இதரசிறுதேவதைகளோ தம்மிடம்வந்து கேட்பதாகப் பொருள்கொண்டு ஆடு மாடு பலியிடுவதும், கள், சாராயம், வைத்துப்பூஜிப்பதும் திருமாலைப்பூஜை, கோடைமுதலிய விழாக்களில் செலவுசெய்வதும், மச்சம், பாம்பு முதலியவைகளைக்கொன்று தெய்வபக்தியால் எடுக்கப்படும் "மச்சக்காவடி" சர்ப்பக்காவடி முதலிய காவடிநோச்சையில் உயிர்பெற்று எழுந்ததாகவும் நம்புவதும் இன்னும் தீக்குழிபாய்வது, உடம்பெல்லாம் வேல்களைக் குத்திக்கொள்வது போன்ற அநாகரிகச்செயலும் பலகூத்தாடிகளால் செய்யப்படும் ஜாலவேடிக்கைகளும் கடவுள் பக்தியால் நடப்பதாகநம்பி மூடப்பக்திகொண்டு, பொருளைச்செலவுசெய்து பகுத்தறிவிழந்து மூட நம்பிக்கையெனும் இருட்படலத்தின் முன்னின்று தத்தளிப்பதினைஎன்பதை அறிவிற்குமதிப்பீந்து வாழும்மக்களில் எவரேமறுக்கவல்லார். எனவேதான் முதலாவது நாம்இந்த மூடநம்பிக்கையை ஒழிக்க அதற்கு மூலகாரணமாயிருக்கும் கடவுள் வெறியையும் மதவெறியையும் ஒழிக்கவேண்டும் என்கிறோம்.

மூட நம்பிக்கையையோட்டி பகுத்தறிவு பெற விரும்புகிறவன் முதலாவது ஒரு விஷயத்தைப்பற்றியாராயும் போது இது இன்னாரால் சொல்லப்பட்டிருக்கிறது, ஆகையால் இது சரியாகத்தானிருக்கும், அவர் நம்மிலும் எத்துணை பெரியார் அவர்கூறியது தவறென்றோ, மூட நம்பிக்கையால் கூறியதென்றோ எண்ணுதல் தகாது. இதற்காகத்தான் சுயமரியாதை இயக்க அன்பன் தோழர் ஈ. வெ. இராமசாமியவர்கள் தான் சொன்னதற்காக நீங்கள் எதையும் நம்பிவிடவேண்டாம். நீங்கள் வீட்டிற்குப்போய் நான் சொன்னவைகளை சாவதானமாய் ஆலோசித்துப் பாருங்கள். சரியென்று கண்டால் அதன்படி நடக்க முயலுங்கள், இன்றேல் எனது பேச்சை மறந்துவிடுங்கள். கூடுமானால் எனது தவரான பிரசங்கத்தைக்கேட்ட காதுகளை லோஷன் விட்டுக்கழுவி விடுகவென்று கூறிவருகிறார்கள். இதையே பகுத்தறிவை வளர்த்த புத்தரும் 'எது ஒரு விஷயத்தையும் அதை சும்மா சொன்னதானாலும் சரி, அல்லது பண்டைய நாட்களிலிருந்து வந்த ஐதிகமானாலும் சரி, வதந்தியானாலும் சரி, பெரியார்கள் எழுதி வைத்த சாசனமானாலும் சரி, ஏதோ ஒரு சாமியின் அருள்வாக்காயிருக்கலாம் என்று நிதானிக்கக்கூடியதானாலும் சரி, தெய்வாதீனமாய் ஒரு முடிவாக நாம் அனுமானித்துக்கொண்டிருந்ததானாலும் சரி, நமது ஆசாரியர்கள் குருக்களாகிய 'இவர்களுடைய பிரமாணமாக விருந்ததானாலும் சரி, அதை நம்பக்கூடாது. ஆனால் சாசனம், கொள்கை, போதனை எதுவும் நம்முடைய சுயபுத்திக்கும் மனச்சாட்சிக்கும் ஒத்துவருமானால் அப்போது அதை நம்பவேண்டும்.........இதற்காகத்தான் நான் சொல்லக்கேட்டால் நீங்கள் வெறுமையில் நம்பக்கூடாது. ஆனால் உங்கள் மனச்சாட்சியறிய நம்பினீர்களானால் அப்போது அதன்படி தாராளமாய் நடந்துகொள்ளுங்கள்' என்று கூறியுள்ளார். எனவேதான் தன் மதிப்பியக்கத்தின் தலைவர் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் எவ்விஷயத்திற்கும் மகாத்மா இவ்வாறு கூறியுள்ளார், நாயன்மார் அவ்வாறு பாடியுள்ளார், ஆள்வார்கள் அப்படி அறைந்துள்ளார்கள், சித்தர்கள் இக்கருத்தை ஆதரித்துச்செப்பியுள்ளார்கள் என்று பெரும் பாலும் மேற்கோளாக எடுத்துக்காட்டுவது கிடையாது. எவரால் கூறப்பட்டிருந்த போதிலும் மக்கள் மனதிற்கு ஒத்திருந்தால் ஒப்புக்கொண்டு நடக்கவும், இன்றேல் அவைகளைத்தள்ளி விடவும் தக்க மனப்பான்மையுடையவராய் மக்களைப்பழக்கவேண்டுமென்பதே அவரது பேரவா. அவ்வாறு செய்யாததினால் தம் இயக்கம் சிறிது மெதுவாகப்பரவுவதிற்கூடப் பாதகமில்லையென்பது அவரது எண்ணம். மூடநம்பிக்கையால் தம் இயக்கத்தைப்பலரை ஆதரிக்கச்செய்வதினுலும் பகுத்தறிவு விளக்கத்தால் சிலரை ஆதரிக்கச்செய்வதே சிறப்புடைமை என்பது அவருடைய கொள்கை. அதனாலேயே இன்று சுயமரியாதைக்காரர்கள் 'மகாத்மா, லோக குரு, ஆள்வார்கள், நாயன்மார்கள், அவதார புருடர்கள், நபிமார்கள், கடவுள் குமாரர்கள், கடவுள்கள், முதலிய எவருடையவார்த்தையாயிருப்பினும், செயலாயிருப்பினும் தங்கள் அறிவிற்குப் பொருந்தியிருப்பின் அதை அஞ்சாது ஏற்றுக்கொண்டும், இன்றேல் தள்ளிவிடவும் செய்து விடுகின்றனர். ஒரு கொள்கையைப் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டிருப்பதாலும் அதைப்பல்லாயிர ஆண்டுகளால் கோடிக்கணக்கான மக்கள் நம்பி வருவதாலும், எல்லோரும் போற்றத்தக்க நூலில் எழுதப்பட்டிருக்கிறது என்பதாலும் அதை ஏற்றுக்கொள்ள சுயமரியாதைக்காரன் எவனும் துணியமாட்டான். எக்கொள்கையாயிருப்பினும் தம் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஒத்துவருகிறதா என்பதை ஆலோசித்து சரியென்றால் ஏற்றுக்கொள்வது பிழையென்றால் தள்ளிவிடுவதுமே அவனுடைய மூலக்கொள்கையாயிருக்கிறது.

இதைஆதரித்தே சி, டப்ளியு. லெட்பீட்டர் என்னும் அறிஞர் 'ஒரு விஷயம் பைபிளில் எழுதியிருக்கிறது என்பதால் அதை நம்புகிறவன் சந்தேகமின்றி அந்த விஷயம் வரைக்கும் மூட நம்பிக்கையுடையவன் எனலாம். ஏனெனில் அந்த நம்பிக்கைக்குத் தகுந்த முகாந்திரம் அவனுக்குத்தெரியவில்லை, அப்படியிருக்க மேடம் பிளவட்ஸ்கி அம்மையார் இவ்விதம் சொன்னார். 'அல்லது (Secret Doctrine) ல் அவ்விதம் எழுதியிருக்கிறது, என்று சொல்வதும் மூடநம்பிக்கையைவிட ஒருபடிதான் முந்தி வந்திருக்கிறது. அப்படிதான் 'செயின்ட் பால்' அல்லது மற்றபுராதன ஆசிரியர்களைவிட மேடம் பிளவட்ஸ்கி அம்மையாருக்கு தான் சொல்லும் விஷயங்கள் தெரிந்திருந்தது என்பதற்கு அநேக அத்தாட்சிகளிருக்கின்றன. என்றாலும் செயின்ட் ஜேம்ஸ் அல்லது செயிண்ட்பீட்டர் அவர்கள் சொன்னார் என்பதைவிட மேடம் பிளவட்ஸ்கி சொன்னார் என்பதால் அது நம்முடைய சொந்த அனுபவமாய் போகிறதில்லை. நாம் ஒரு விஷயத்தை தெரிந்து கிரகித்துக்கொண்டு அதை நம்மறிவோடு அறிவாகச்சேர்த்து அதில் நாம் வைரப்பு வேண்டும். அதை நம்மில் வேறுன்றிவிடவேண்டும். நாம் கிளிப்பிள்ளைகளைப்போல் வாசித்ததைச் சொல்லிக்கொண்டிருக்கும் வரையில் விஷயங்கள் எல்லாம் மூடநம்பிக்கைகளே. இங்கே எழுதியிருக்கின்றது, அங்கே எழுதியிருக்கின்றது என்பதை விட்டு நல்ல முகாந்திரம் தெரிந்து கொள்ளாவிடில் உண்மைப்பொருளிலிருக்கும் நம்பிக்கைகூட மூட நம்பிக்கைதான். நம்முடைய மனதோடு மனதாகும் போது 'அது எனது என்னுடைய சொந்தம் நான் என் நம்புகிறேனென்று எனக்குத் தெரியும். ஆதலால் எனது நம்பிக்கை அறிவோடுள்ள நம்பிக்கை மூடநம்பிக்கையல்ல' என்று கூறலாம் எனக்கூறியுள்ளார்.

இவைகளினால் பெரும்பாலும் மூட நம்பிக்கை வளர்வதற்கு மூலகாரணமாயிருப்பது கடவுள், மதம், அவதார புருடர், வேதம், பெரியார் வாக்கு முதலியவைகளே என்பதும், அதனாலேதான் நாட்டில் விபசாரம், பகுத்தறிவின்மை, தீண்டாமை, கொலை, களவு, குடி, மூடநம்பிக்கைகள், பணச்செலவுகள், ஒற்றுமையின்மை, தரித்திரம், முதலிய பல் வேறு துன்பங்களுக்கும், பழக்கம் வழக்கம் என்னும் பேய்களுக்கும் மக்கள் ஆட்பட்டு, மோட்சம் நரகம் என்னும் கட்டுக்கதையில் காதல் கொண்டு தம் இன்பவாழ்வைக் குலைத்து உலகில் சாந்தியின்றி எப்போழுதும் தரித்திரத்திலும் துன்பத்திலும் மூழ்கித்தத்தளித்து, நம்முன் காணப்படும் மிருகங்கள் பறவைகள் புழுக்கள் முதலியவைகளைவிடக்கேவலமாக வாழ்ந்து வருகின்றார்கள். எனவே மக்கள் சாந்திவாழ்வைப் பெறவேண்டுமானால் இவ்வுலகினின்று 'கடவுள் வெறியும், மதவெறியும்' ஒழிக்கப்படவேண்டும். அதனையொழித்து பகுத்தறிவைத்துணைகொண்ட உருசியா தேசம் இன்று விபசாரம் என்பதை அறவே களைந்து பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், களவு, பொய், முதலியவைகள் இன்னதென்பதையறியாது ருசியர்கள் மண்மீது தேவர்களைப்போல் வாழ்கிறார்களென உலகப்பெரியார்களான டாக்டர் ரவீந்திரநாத்தாகூர், பெர்னாட்ஷா முதலியோர்களின் போற்றுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் காரணமாய் விளங்குகிறதெனபதையுணர்ந்து, நம்நாட்டினரும் 'கடவுள் வெறியும் மதவெறியும்' அழியப்பாடுபட முன்வருவார்களாக.

---


## மலையாளம் சில்க் & சேலைகள்.

2½ வீதி 5 நீளம் பட்டு 1-க்கு ரூ. 1—8—0

டை கம்பிக்கரை டஜன் 1-க்கு ரூ. 15—0—0

3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ. 3—8—0

2½×12 நீளம் லேட்ரோஸ் சேலை 1-கது ரூ. 3—8—0

டை 14 நீளம் சேலை 1-க்கு ரூ. 4—8—0

இதில் எல்லா கலர்களில் கிடைக்கும்.

தீபாவளி பண்டிகைக்கு ஸ்பேஷலாய் தயார் செய்கிறோம்.

S. K. R. வீவிங்பாக்டரி, கோட்டார், திருவிதாங்கூர்,

# இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவு செலவு கணக்கு.

## நன்கொடை விபரம்.

காரைக்குடியில் 17—7—32 தேதியில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவு செலவு கணக்கு விபரம் வருமாறு:—

| | | ரூ. |
|---|---|---|
| காரைக்குடி- தோழர் | மு. ராம. பெரியணன் செட்டியார் அவர்கள் (முனிசிபல் வைஸ் சேர்மன்) ... | 25 |
| ,, ,, | ராம. சுப்பையா—விசாலாட்சி அவர்கள் (சமதர்ம விலாஸ்,) முத்துப்பட்டணம் ... | 26 |
| கோட்டையூர் ,, | அ. க. அ. சித. வெ. நடராஜன் செட்டியார் அவர்கள், (பேங்கர்) ... | 25 |
| சொக்கநாதபுரம் ,, | எ. என். எ. சாமிநாதன் செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 25 |
| ,, ,, | செ. ராம. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 25 |
| திருமயம் ,, | ராம. சின்னய்யா அவர்கள் (பேங்கர்) ... | 25 |
| அன்னவாசல் ,, | எ. எஸ். ஆறுமுகம் அவர்கள் (பேங்கர்) ... | 25 |
| கோட்டையூர் ,, | ராம. அழ. சித. அண்ணாமலை செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 15 |
| காரைக்குடி ,, | சித. க. கதிரேசன் செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 15 |
| ,, ,, | ச. பி. க. முகம்மது இப்ராகிம் ராவுத்தர் அவர்கள் (முனிசிபல் கவுன்சிலர்) ... | 15 |
| ,, ,, | நா. கு. இராமநாதன் செட்டியார் அவர்கள் (முனிசிபல் கவுன்சிலர்) ... | 10 |
| ,, ,, | அ. மு. க. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் (முனிசிபல் கவுன்சிலர்) ... | 10 |
| ,, ,, | அரு. கி. நடராஜன் செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 10 |
| கோட்டையூர் ,, | தேனப்ப செட்டியார் அவர்கள் (யூனியன் போர்டு பிரசிடெண்டு) ... | 10 |
| காரைக்குடி ,, | பெரி. கா. தேவராஜன் செட்டியார் அவர்கள் [முனிசிபல் கவுன்சிலர்] ... | 10 |
| திருக்கோஷ்டியூர் ,, | பண்டிட் நா. நமசிவாயம் அவர்கள் (தமிழ் வைத்தியசாலை) ... | 10 |
| கோட்டையூர் ,, | நா. கா. சின்னையா அவர்கள் ... | 10 |
| காரைக்குடி ,, | சுப்பையா செட்டியார் அவர்கள் (மைசூர் ஜவுளி வர்த்தகசாலை) ... | 5 |
| ,, ,, | சித. இராமநாதன் அவர்கள் (பாரதிபிக்சர் பாலெஸ்) ... | 5 |
| ,, ,, | டாக்டர், கோவிந்தராஜுலு அவர்கள் ... | 5 |
| கானாடுகாத்தான் ,, | வயி. சு. சண்முகம் அவர்கள் (பேங்கர்) ... | 5 |
| காரைக்குடி ,, | அ. மு. க. அள. ராமப்பா செட்டியார் அவர்கள் (பேங்கர்) ... | 5 |
| ,, ,, | சித. மெய்யப்பா அவர்கள் ... | 5 |
| ராயவரம் ,, | சு. கதிரேசன் செட்டியார் அவர்கள் (காந்தி வாசகசாலை) ... | 5 |
| ஆராவயல் ,, | சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் ... | 5 |
| கண்டவராயன்பட்டி ,, | முரு. சொக்கலிங்கம் அவர்கள் | 3 |
| காரைக்குடி ,, | சுப்பையா அவர்கள் (சுதேசி ஸ்டோர்ஸ்) .. | 3 |
| ,, ,, | பழ. அருணாசலன் அவர்கள் ... | 3 |
| | ஆக ரூபாய் | 340 |

## செலவு விபரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| தபால் தந்திச் செலவு ... ... | 19 | 9 | 9 |
| பிரயாணச்செலவு ... ... | 103 | 5 | 0 |
| பிரதிநிதிகள் சாப்பாட்டுச்செலவு ... | 96 | 12 | 0 |
| விளம்பரச்செலவு ... ... | 15 | 2 | 0 |
| அச்சாபீஸ் செலவு ... ... | 43 | 1 | 0 |
| கொட்டகை அலங்காரச் செலவு ... | 13 | 1 | 0 |
| தலைவர்கள், பிரதிநிதிகள், வரவேற்பு, ஊர்வல உபசாரச்செலவு ... ... | 44 | 1 | 0 |
| பொக்கிஷதார் வசம் இருப்பு ... | 5 | 0 | 3 |
| ஆக ரூ. | 340 | 0 | 0 |

சித. இராமநாதன்,
பொக்கிஷதார்
காரைக்குடி, 20-9-32.

ராம. சுப்பையா,
ராம. சின்னையா,
அ. பொன்னம்பலம்,
கரு. மெ. இராமசாமி,
பொதுக்காரியதரிசிகள்.

---

## சுயமரியாதைச் சங்கம்.

### கட்டிடவேலை துவக்கம்.

துறையூர் சுயமரியாதைச் சங்கத்திற்கு நிரந்தரமான இடமில்லாமையினாலும், இவ்வூரில் நடந்த தமிழர் மகாநாட்டிற்கு பிறகு நகர் முழுதும் நமது இயக்கக் கிளர்ச்சி பரவியதாலும், இவ்வூர் தேவாங்கத்தெருவிலுள்ளவரும் பிரபல ஜவுளி வியாபாரியும் சென்ற தமிழர் மகாநாடுவரையில் கோவில், குளம், தேவாரப்பாடசாலை, திருஞானசம்பந்தர் ஆண்டு விழா முதலிய என்று சொல்லும் பொது ஸ்தாபனங்களுக்கும் ஏராளமாய் தமது செல்வத்தைக்கொடுத்துதவி வரும் ஏழைகள் நோக்கமறிந்து அவர்கள் பசிப்பிணியை போக்குபவருமான கொடைவள்ளல் திருவாளர். டி. பி. எ. அங்கண்ண செட்டியார் அவர்கள் முயற்சியாலும், அவர் குமாரர் திரு. முத்துசாமி செட்டியார் அவர்கள் முயற்சியாலும் இவர்களுக்கெல்லாம் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கிய திருவாளர் என். கே. ராமசாமி செட்டியார் அவர் சகோதரர் திரு. என். கே. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்கள் முயற்சியாலும் தேவாங்க குல வாலிபர்களில் தீவிர சுயமரியாதைப்பற்றுடையவர்களுமான தோழர்கள் மைனர் பெருமாள், அபிறு. குமாரசாமி இன்னும் சில இளைஞர்களின் ஊக்கத்தாலும், தேவாங்கத்தெருவில் 19—9—32ல் 600 ரூபாக்கு காலி நிலம் துறையூர் சுயமரியாதைச் சங்கத்திற்கு சர். பி. தியாகராயர் இலவசவாசகசாலையின் பெயரால் வாங்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்தாய் விட்டது. இனி ஷை தெருவில் எந்த அர்த்தமற்ற மூடச்சடங்குகளுக்கும் நான் பெரியவன் நீ தாழ்ந்தவன், நான் நாட்டாண்மைக்காரன் நீ எனக்கு அடிமையாக வேலை செய்ய வேண்டும் என்று இறுமாப்படையும் பண்டைய வழக்கமெல்லாம் அறவேயொழிப்பதற்கு கங்கணம் கட்டிவிட்டார்கள். 25—9—32ல் ஞாயிற்றுக்கிழமைமுதல் சங்கத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு கல்நாட்டு விழா ஆரம்பிப்பதற்கு நமது இயக்கத்தலைவர்களை வரவழைத்து ஷை விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள், எனினும் இவ்விழா நடத்துவதும் மூடப்பழக்கத்தை சேர்ந்ததென்றும் பிரசாரத்திற்கு மட்டும் தலைவர்களை அழைத்தல் போதுமென்றும் ஏற்பாடு செய்கிறார்கள். கூடிய விரைவில் கட்டிடத்தைக்கட்டிமுடித்துவிட்டு திறப்பு விழாவை நடத்திவிடலாம் என்று பலர் முயற்சி எடுத்து வருகிறார்கள். மேற்கண்ட முயற்சிகளுக்கு ஊக்கம் குன்றாமல் வேலை செய்யும் பெரியோர்களுக்கும், இவ்வூர் சுயமரியாதை இயக்கத்தோழர்கள் அனைவருக்கும் என்றும் நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று திரு. ராமசாமி எழுதுகிறார்.

—:0:—

## திருச்சி.

### தென்னிந்தியநலவுரிமைச்சங்கம்.

திருச்சி, தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்தார்கள். தஞ்சையில் நடைபெறப்போகும் மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத்தலைவராகிய உயர் திரு- பொப்பிலி மகாராஜா அவர்கட்கு 2—10—32 ஞாயிற்றுக்கிழமை வரவேற்புப் பத்திரம் அளிப்பார்கள். அதன்பின்னர் காலஞ்சென்ற மாபெருந்தலைவராகிய பனகால் அரசரவர்களின் படத்தைத் திறந்து வைப்பார்கள்.

மற்றும் திருச்சியிலுள்ள சுயமரியாதைச்சங்கம், பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் ஆதிதிராவிடர் சங்கம் முதலியவைகளும் ராஜசாகிப் அவர்கட்கு வரவேற்புப்பத்திரங்கள் அளிக்கப்போவதாகவும் தெரிகிறது.

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

யே இருத்தல் வேண்டும். (அதுகுடியாட்சியாயினும் சரியே முடியாட்சியாயினுஞ்சரியே)

ஆ. அப்பாடசாலைகளில் செல்வந்தரின் பிள்ளைகளுக்கென்று தனித் தனி பாடசாலைகளேனும், அன்றி வேறேவ்வித பேதமேனு மிருத்தல் கூடாது.

இ. நாட்டின் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாகக் கற்கச்செய்வதோடு, அக்கல்வி இலவசமானதாகவுமிருத்தல் வேண்டும். படிப்பிற்கு வேண்டிய புத்தகங்கள் முதலிய உபகரணங்களனைத்தும் அரசாங்கத்தாரால் ஒவ்வொருபிள்ளைக்கும் கொடுக்கப்படல் வேண்டும். பொதுக்கல்விசற்று முடிந்தவுடன், பிள்ளைகளின் கருத்திற்கிசைந்ததான தொழிற்கல்வியை அவர்கள் கற்கும்படி செய்தல் வேண்டும். அதற்கான தொழிற்காலாசாலைகளும் அரசாங்க நிர்வாகஸ்தர்களாலேயே நடத்தப்பட்டு அதில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எவ்வகைச் சிரமமின்றி திட்டங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

ஈ. பாடசாலைகளில் ரசாயன அறிவும், சரித்திரமும், கணிதமும், சுகாதாரமும் பூகோளமும் பொதுப்பாடங்களாகவிருக்க வேண்டும். பாடபுத்தகங்களில் எவ்விதமதத்தத்துவங்களும் புகுத்தப்பட்டிருத்தல் கூடாது. மற்றும் அறிவிற்குப் பொருந்தாதனவும் அர்த்தமற்றவுமான விஷயங்கள் அவற்றிலிருந்து அகற்றப்படல்வேண்டும்.

உ. பாடசாலைகளிலேயே பிள்ளைகளுக்கு விளையாடுமிடங்கள் அமைத்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் கட்டாயமான தேகப்பயிற்சி கொடுத்தல் வேண்டும்.

ஊ. ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள சிலகலாசாலைகளிலுள்ளபடி, பிள்ளைகளின் ஒழுக்கத்தைத்திருத்தவும், நீதியைப்போதிக்கவுமான "மாணவப்பஞ்சாயத்துகள்" ஏற்படுத்தவேண்டும். ஓர்மாணவன் ஒழுக்கந்தவறி நடப்பானேல் அவனை அப்பஞ்சாயத்தில் கொணர்ந்து விசாரணைபுரியவும், அப்பஞ்சாயத்தார் செய்யும் முடிவைக்கலாசாலைத்தலைவர் அங்கிகரிக்கவும் இடமிருக்கவேண்டும். அத்துடன் அப்பஞ்சாயத்திலுள்ள அங்கத்தினர்களனைவரும் மாணவர்களாகவும், அவ்வங்கத்தினர்கள் தங்களுக்குள்ளாகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவுமிருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் மாணவர்களின் ஒழுக்கம் செம்மைப்படுவதோடு, விவகாரங்களின் போக்கும் நீதியும் சிறுபிராயமுதலே அவர்கள் மனதில்பதிந்து உறவும் பெற ஏதுவாகும் இம் "மாணவப்பஞ்சாயத்து" முறை அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படுகிறது.

எ. சிறுவர்கள் தீய ஒழுக்கங்களைக்கையாடுகிறார்களா என்று கவனிக்க அதற்கென "இன்ஸ்பெக்டர்கள்" நியமனம் செய்யப்படல் வேண்டும். அவ்வாறு தவறி நடக்கும் சிறுவர்களை கண்டிக்கும் முறையில் அவர்களைத்திருத்தும் விதமே இருக்கவேண்டுமேதவிர அவர்களைத்தண்டிக்கும் முறை இருத்தல் கூடாது. உலக பாஷை முழுவதையும் கற்றுக்கொள்ள கலாசாலைகளில் வசதியிருக்கவேண்டும்.

### தொழிற் கல்வி.

(ஏ) "கல்வி" என்னும் தலைப்பில் "தொழிற் கல்வி" என்னும் பிரிவு அதிமுக்கியமானது. ஒவ்வொருமாணவனும் தனது விருப்பிற் கிணக்கமாக ஏதேனுமோர் தொழிலையேனும் கட்டாயம் கற்கத்திட்டப்படுத்தவேண்டும். ஒவ்வொரு தனி நபரின் சம்பாத்திய பலமே பொதுச்சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகும். ஒவ்வொரு மாணவனுடையவும் சம்பாத்திய சக்தியை விருத்திப் படுத்தும்படியான தொழிற் கல்வியை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும். தனி நபரின் க்ஷேமமே, பொது ஜனங்களின் க்ஷேமமென்பதை சர்க்கார் உணரவேண்டும். சுருங்கக் கூறவேண்டுமானால், "ஜனசமூகத்தில் தனக்கும் ஓர் முக்கிய ஸ்தானம் உண்டென்றும், அந்தஸ்தானத்திற்கு உரியவனாகத் தன்னைச் செய்து கொள்வதுடன், அந்தஸ்தானத்திற்குரிய கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டியது தனது கடமை" என்றும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் உணரும்படி செய்துவிடவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

(ஐ) படம் வரைதலும், களிமண்ணால் உருவங்கள் அமைப்பதும் ஒவ்வொரு ஆரம்பப்பாடசாலைகளிலும் கட்டாயபாடமாக விருக்கவேண்டும்.

(ஒ) தச்சுவேலை, கொல்வேலை, பயிண்டு வேலை, செருப்பு தைத்தல், முதலியவைகளும் கற்பிக்கப்படல் வேண்டும். தையல், சமையல் முதலியவைகளும் கற்றுக்கொடுக்கவேண்டும். தவிரவும் வர்த்தகம், விவசாயம், கப்பலோட்டுதல், விமானங்களோட்டுதல் முதலியவற்றைப்போன்ற தொழில்களைப் போதிக்கும் கலாசாலைகள் பல நிறுவப்படல் வேண்டும். ஆரம்பப்படிப்பு முடிந்தவுடன் சிறுவர் சிறுமியர் தங்கள் தங்கள் வாசனைக்குகந்த தொழிற் கல்வியைக் கற்க, அதற்கான கலாசாலைகளில் சேரவேண்டும். ஆனால் எல்லாப்படிப்பும் சர்க்காரது மேற் பார்வையில், பிள்ளைகளிடம் சம்பளம் பெறாது கற்றுக்கொடுப்பவைகளாயிருத்தல் வேண்டும்.

இதுவரையில் "கல்வி" என்னும் தலைப்பைப்பற்றி நாம்பன்னிப்பன்னி வரைவதெல்லாம், "நாட்டின் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும், ஆரம்பப் பொதுக்கல்வியையும் ஏதேனும் ஒரு தொழில் கல்வியையும்பெற்றிருக்கவேண்டிய பொருப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததென்பதை வலியுறுத்துவதற்கேயாம். இனிவரும் அடுத்த கட்டுரையில், நாட்டு மக்களின் தொழில் முறைபற்றி ஆராய்வாம்.

## மதுரை சுயமரியாதை சங்கத்தின் விசேஷக் கூட்டம்.

25—9—32உ மாலை 6மணிக்கு மதுரை சுயமரியாதைச் சங்கத்தின் அங்கத்தினர்களின் விசேஷ கூட்டம்நடந்தது. அதுசமயம் சுமார் 120 பேர்கள்வரை விஜயம் செய்திருந்தார்கள் அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடு நடத்த வேண்டுமென்று இக் கூட்டத்தார் தீர்மானிக்கிறார்கள்.

மதுரையில் மகாநாடு நடத்த வரவேற்புக்கமிட்டி அமைத்து நடத்த வேண்டிய முன் வேலைகளைச்செய்ய அடியில்கண்ட கனவான்களடங்கிய சப்கமிட்டி ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் எஸ். வி. பி. என். எஸ். தங்கமணி, ஏ.ஏ. ஆறுமுகம், ஏ. வேணுகோபால், டி. வி. பதி, ஏ. எஸ். ஆனந்தம், எம். எஸ். சுப்பிரமணியம்.

"தாழ்த்த பட்டவர்களுக்கு சம உரிமை கொடுக்கப்படுவதற்காக செய்யப்படும் முயற்சிகளில் எல்லோருடனும் ஒத்துழைக்க இச்சங்கத்தார் தயாராயிருக்கிறார்கள்" என்று ஏ. எஸ். அருணசலம் அவர்களால் பிரரேபிக்க ஏ. என். வெங்கிடசாமி அவர்களால் ஆமோதிக்க தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பின் சில விதிகளை மாற்றியும் சேர்த்தபின் கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

## தென்மாப்பட்டு.

### தமிழர் சமரச சங்கம்.

ஷை சங்கத்தின் திறப்புவிழா 7—9—32 ந்தேதி தோழர் சோமசுந்திரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின் ஒரு பொதுக்கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்திற்கு சமதர்ம செந்தமிழ்கலாசாலை ஆசிரியர் தோழர் முருகன் தலைமை வகித்தார். தோழர்கள் பல அறியவிஷயங்களைப்பற்றி சொற்பொழிவாற்றிய பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## பிரசங்கம்.

21—9—32-சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மேல் கோலார் தங்க வயல் மாரிகுப்பம் தென்னிந்தியா பௌத்த சங்க சபா மண்டபத்தில் உயர் திருவாளர் ஜி. அப்பாதுரையார் அக்கிராசனத்தின் கீழ் திருமதி கே. சி. எம். ஜெகதாம்பாள் ஷை. சங்க வித்வானும் தமிழ் பண்டிதருமாகிய திருவாளர் இ. நா. ஜயாகண்ணுபுலவர் பேசிய பின்னர் சபா நாயகர் கூட்டுத் தொகுதி, தனித்தொகுதியைபற்றி விளக்கி வெகு சாதுரியமாய் பிரசங்க மாரி பொழிந்தனர் எனக்கௌரவ காரியதரிசியார் எழுதுகிறார்.

## திருச்சி சுதேசி எம்போரியம் திறப்புவிழா.

திருச்சி பெரிய கடைத்தெரு 201ம் நம்பரில் புதிதாக ஏற்படுத்தப் பெற்ற திருச்சி சுதேசி எம்போரியத்தை 4-9-33 காலை 9 மணிக்கு திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டு ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமிபிள்ளை எம். ஏ. பி. எல். எம். எல். ஸி. அவர்கள் திறந்து வைத்தார்கள். அவ்வமயம் ஏராளமான அன்பர்கள் வந்திருந்து பல இந்திய நாட்டுச்சாமான்களை வாங்கிச்சென்றார்கள். அனைவருக்கும் சந்தன தாம்பூலம் கற்கண்டு புஷ்பம் வழங்கப்பெற்றது. நகரிலுள்ள முக்கியஸ்தர்கள் பலரும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒரு நிருபர்)


## கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட்.

64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை.

## மதனகமம் (புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மாணிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறுமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்
தர்மராஜா கோவில்வீதி, புதுச்சேரி.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

த்தார்கள். இதுவெறும் உத்தேசமேயொழிய இந்த கற்பனைக்கு ஒரு ஆதாரமும் கிடையா. ஆன்மா இல்லாமல் கருமத்திற்கு ஈடாக பலன் யார் அனுபவிப்பது? புத்தர்கள் சித்தாந்தப்படி பஞ்சபூத சையோகத்தினாலும், பஞ்சஸ்கந்த சையோகத்தினாலும் ஆக்கப்பட்ட நிரேகம் சுடலையோடு அழிந்துபோவதால், இறந்த பிறகு எதுபோய் மறு பிறப்பில் வினையை அனுபவிப்பது? இதற்கு புத்தர்கள் வார்த்தை ஜாலமொன்றை செய்வதாகத்தெரிய வருகிறது. புத்தர்களில் ஒரு வகுப்பார் இறக்குங்காலை எண்ணிய கோரிக்கை மறுபிரப்பை அடைவதாகச் சொல்லுகின்றார்கள். (சம்யுத நிகாயம் IV. 302) மற்றொருவர் சொல்வதாவது, நாம் உயிர்வாழுங்காலை எந்த எண்ணத்தை விசேடமாகக் கொள்கின்றோமோ அந்த எண்ணமே மறுபிறப்பை அடைகிறது. (மஜ்ஜிம நிகாயம் III. 90) பேதவத்து, விமானவத்து என்ற புத்தகங்களில் எதாகிலும் ஒரு காரியம் மறுபிறப்பை அடைவதாக எழுதிவுள்ளது தம்ம சங்கினி (Dhumma Sangini) என்ற புத்தர்களுடைய மானவ நூல், (Buddhist Psychology), ஒருவனுடைய மனத்தின் போக்கே (Mental Disposition) மறுஜனனம் எடுப்பதாகக் கூறுகிறது. இவ்வாறு ஒன்றுக்கொன்று பொருந்தாத சொற்களைக்கொண்டு, புத்தர்கள், ஆன்மா இல்லாத மறுபிறப்பை கற்பிக்கின்றார்கள். ஆதலின், புத்தர்களுக்குள்ளே முரண்பட்ட கர்ம சித்தாந்தம், கற்பிதமென்பதற்கு என்ன தடை? இவர்களுடைய கர்ம சித்தாந்தத்திற்கும், கிறிஸ்துவர்களுடைய புண்ணிய பாப சித்தாந்தத்திற்கும் (Good and Evil Doctrine) யாதொரு வித்தியாசமுமில்லை. கிறிஸ்துவர்களும், ஒருவன் நன்மை செய்தால் மோட்சமடைகின்றான். தீமை செய்தால், நரகத்திற்குச் செல்கின்றான் என்று சித்தாந்தப்படுத்துகின்றார்கள். இறந்த பிறகு சீவித காலத்தில் நன்மையோ, தீமையோ செய்த ஒருவன், நரகத்திற்கோ, அல்லது மோட்சத்திற்கோ போகின்ற விஷயத்திற்கு, யாதொரு அத்தாட்சியும் இல்லை. இந்த நன்மை தின்மை சித்தாந்தம், ஏட்டுச் சுரக்காய் போன்ற வெறுஞ் சொல்லே. இந்த சித்தாந்தத்தில், எந்த உண்மையுமில்லை, வெறுங் கற்பனையே. அது போலவே, புத்தர்களுடைய கர்ம சித்தாந்தமும், வெறுஞ் சொல்லேயாகும். உலகில் சிலர் தனவந்தர்களாகவும், சிலர் தரித்திரர்களாகவும், சிலர் நோயற்றவர்களாகவும் சிலர் நோயாளிகளாகவும், சிலர் சுகபோகிகளாகவும், சிலர் சுகமற்றவர்களாகவும், சிலர் அரசர்களாகவும், சிலர் தாழ்த்தப்பட்டோர்களாகவும் இருந்து வருவதை நமது முன்னோர்கள் கண்டார்கள். இந்த சமூக வித்தியாசங்களுக்கும், பொருளாதார வித்தியாசங்களுக்கும், எது காரணமாய் இருக்கக்கூடுமென நமது முன்னோர்கள் சிந்தித்தார்கள். சிலர், இந்தப் பிறப்பில் அனுபவிக்கும் சுகாசுகங்களை, முன் பிறப்பில் செய்த வினையால் என்றார்கள். இந்த யோசனை, இந்துக்களுடைய மறுபிறப்பு கற்பனைக்கு ஆதாரமாய் நின்றது. இந்த கற்பனையே, புத்தர்களுடைய கர்ம சித்தாந்தத்திற்கும் ஆதாரமாய் விட்டது. இன்னுஞ் சிலர், அவனவன் தலைவிதிப்படி நடப்பதென்றார்கள். பிரமன் சிருஷ்டிக்கும்போது அவனவன் தலையில் எழுதியபடி சித்திக்குமென்றார்கள். இது தான் மகமதியர்களுடைய தலைவிதி சித்தாந்தமெனப்படும் (Fate or Predestination) மற்றும்சிலர் ஆதியில் கடவுள், தான் சிருஷ்டித்த ஆண் பெண்ணுக்கு நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்று அறிந்து நடக்கும்படி, பகுத்தறிவைக்கொடுத்தார். அதனைக்கடந்த மனிதர்கள், நரகத்திலும், பர்கேடரி (Purgatory) இலும் வேதனைப் படுகின்றார்கள். இதுதான், ஆதி பாபம் (Original Sin) என்ற கிறிஸ்துவர்கள் சித்தாந்தம். இவ்விதமாக, நமது முன்னோர்கள் விஷயங்களை பரீட்சித்து அறியாமல், கண்டபடியெல்லாம், நமக்குள் இயற்கையாகவே ஏற்படும் வித்தியாசங்களுக்கு, காரணங்களை கற்பனை செய்து கொண்டார்கள். புத்தர்கள் “கர்மத்தால்” இந்த சமூக வித்தியாசங்கள் உண்டாயின என்றார்கள். இந்துக்கள், ஆன்மா செய்துவரும் வினையால், இந்த வேற்றுமைகள் உண்டாகின்றன என்றார்கள். மகமதியரும், சில இந்துக்களும், அவனவன் தலைவிதிப்பயன்படி நமக்குள்ள பொருளாதார வித்தியாசமுண்டாகின்றன என்றார்கள். கிறிஸ்துவர்கள், ஆதாம் ஏவாள் பூர்வத்தில் செய்த தீமையால், இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன என்று சித்தாந்தப் படுத்துகின்றார்கள். உலகில் மாணிடர்களிடம் காணும் நானாவித வித்தியாசங்களுக்கு அந்தந்த மதஸ்தர்கள் தங்கள் முன்னோர்கள் காரணங்களை கற்பித்துக்கொண்டவாறு, இன்றைக்கும், இந்துக்களும், மகமதியர்களும், கிறிஸ்துவர்களும், புத்தர்களும், அதே கற்பிதங்களை சித்தாந்தப்படுத்திக் கொள்கின்றார்கள். இந்த பலவேறுபட்ட சித்தாந்தங்களில், உண்மை எதுவென்று கேட்கின்றோம்? இந்த சித்தாந்தங்களில், எதையாகிலும் ஒன்றை, பரிட்சிக்க முடியுமா எனவும் கேட்கின்றோம்? ஒரே திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொண்டு, இந்த சித்தாந்தங்களின் ஆபாசத்தை (Absurdity) விளக்குவாம்.

ஆட்டு வாலை எடுத்துக்கொள்ளலாம். ஒரு ஆட்டுக்குள்ள வால், மற்றோர்ஆட்டுவாலைப்போல் இல்லாமல் ஏதோ ஒரு வித்தியாசமுடைத்தாய் இருக்கிறது. இந்துக்கள் சொல்வது போல்; எந்த வினையால் இந்த ஆடுகளுக்குள்ள வாலின் வித்தியாசமெனக்கேட்கின்றோம்? இது நிற்க, புத்தர்கள் கர்ம சித்தாந்தப்படி, எந்த ஆடு, என்ன கர்மம், எந்த பிறப்பில் செய்த ஈடாக, இந்த ஆட்டின் வால் வித்தியாசப்பட்டதை பரீட்சார்த்தமாக தெரிவிக்கக்கூடுமாவெனக் கேட்கின்றோம்? கிறிஸ்துவர்களைக் கேட்கின்றோம், ஆதியில் ஆதாம் ஏவாள் தான் கட்டளையை மீறிய ஆதிபாவத்தின் பயனாக, இந்தக் காலத்தில், நமக்குள்ள வித்தியாசமென்கின்றீர்கள்! ஆனால், எந்த ஆதி ஆடு, கட்டளையை மீறியதற்கு, இந்த ஆட்டின் வால் குறைந்துளது என்று கேட்கின்றோம்? இது ஒரு பக்கம் இருக்க, தலை விதிப்படி நடக்கின்றதாக சொல்லும் வாதிகளைக்கேட்கின்றோம். ஆட்டின்வால் குறைந்திருக்கவேண்டுமென்று எந்தக் காலத்தில், எந்த எழுத்தால், எந்த ஆட்டின் மூளையில் எழுதிவைத்தார் பிரமன், என்று சொல்லக்கூடுமா என்றும் கேட்கின்றோம். “பிரமலபி” என்று சொல்லுகிறீர்களே, அது எந்த பாஷையின் எழுத்து என்று சொல்லக்கூடுமா எனவும் கேட்கின்றோம்? ஒரு காலத்தில், மழைக்கு வருணபகவானையும், காற்றுக்கு காற்றுபகவானையும், (மாருதி) சமுத்திரத்திற்கு சமுத்திரா தேவியையும், பூமிக்கு பூமி தேவியையும், ஆற்றுக்கு கங்காதேவியையும், இடிக்கு இடிராஜனையும் காரணகர்த்தாக்களாக நமது முன்னோர்கள் எண்ணி வந்தார்கள். நேற்றையதினம் தோன்றிய சந்திர கிரகணத்தை, ராகு கேதுக்களாகிய இரண்டு பெரிய பாம்புகள், சந்திரனை விழுங்குவதால், உண்டாயிற்றுஎன்று நமது முன்னோர்கள் செய்த கற்பனையை, இன்றைக்கும் அனேக இந்துக்கள் நம்புகின்றார்கள். இன்று நாம் அவைகள் யாவும் கற்பிதச் சொற்களே யொழிய, எதார்த்தப் பொருள்கள் அல்லவென தெரிந்துகொண்டோம். அது போலவே, “கன்மம்” என்ற சொல்லும், “ஆதிபாவம்” என்ற சொல்லும், “மருபிறப்பென்பதும்” “தலை விதி” என்பதும், நம் முன்னோர்கள் கற்பித்துக்கொண்ட கற்பனை சொற்களென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அகஸ்தியர் கமண்டலநீரால் மகா சமுத்திரம் உண்டாயிற்று என்று நம்பும் எந்த சிறுவனாவதுண்டா? ஆனால், ராமசாமி, இந்த ஜன்மத்தில் செய்த காரியத்திற்காக, வருகிற ஜன்மத்தில், குஷ்டரோகி வீராசாமியாகப் பிறந்தானென்ற நம்பிக்கை நமது மக்களுக்கு அநந்தம் பேருக்குண்டு! இந்த எண்ணத்தை கோடிக்கணக்கான புத்தர்களும் இன்றைக்கும் நம்புகின்றார்கள். புத்தரும் இந்த கற்பனையை, இந்துக்களிடமிருந்து, தனக்கு வேண்டியவரை, எடுத்துக்கொண்டதாகவும் யூகிக்கலாம். இனி, புத்தர்களுடைய மற்ற இரண்டு கற்பனைகளாகிய மறுபிறப்பு (Rebrith) (Nirvana) நிர்வாணம், இவைக் குறித்துப்பேசுவாம்.

மறுபிறப்பு என்ற புத்தர்களுடைய கோட்பாடு, மனிதர்கள் கற்பித்துக்கொண்ட ஒரு யுக்தியாகும். இந்த யூகையால், மனிதர்களுக்குள்ள சமூக வித்தியாசங்களையும், அவர்களுடைய பொருளாதார வித்தியாசத்தையும் முற்பிறப்பில் செய்த வினையால், இந்த பிறப்பில் உண்டாயின என்று சொல்லுகின்றார்கள். மனிதன் இறந்த பிறகு, அவனுடைய “ஆன்மா” வேறு ஜனனம் எடுப்பதென்பது இந்துக்கள் ஆதியில் கற்பித்துக்கொண்ட யுக்தி. இதனையே புத்தரும் தனது தருமத்தில், ஒரு சித்தாந்தமாக சேர்த்துக்கொண்டார். புத்தருடைய மறுபிறப்புசித்தாந்தத்தில், உயிரோ, அல்லது சீவனோ, அல்லது ஆன்மாவோ புனர் ஜனனம் எடுப்பதில்லையாம். ஆனால், புத்த மதத்தில் மறுபிறப்பு; முக்கியமான சித்தாந்தமாகும். உயிரோ, சீவனோ, ஆன்மாவோ, மனிதனுக்கு இல்லாமற் போமாகின், எது புனர் ஜனனம் எடுப்பதென்பதை, கடந்த 2500 வருஷமாக எந்த புத்தனும் விளங்க வைக்கவில்லை? மறு ஜனனம் எடுப்பதைப்பற்றி நானாவித புத்த சமூகங்கள், நானாவிதமாக உளருகின்றார்கள். ஒருவருக்கும் தெளிவாக [clear] தெரிந்தபாடில்லை. மலிந்த பிரச்சினை என்ற ஓர் நூலில், [Questions of King Milanda] மறுபிறப்பைப்பற்றிப் பேசும்போது, மறுஜனனத்தை, ஒரு விளக்கு மற்றோர் விளக்கிலிருந்து பெறப்படுவதுபோலவும், உபாத்தியாயர் பாடம் மாணாக்கரிடம் கற்பிக்கப்படுவது போலவும், ஒரு படத்திலிருந்து பல காப்பிப் படங்கள் பெறுவது போலவும், ஒருவனுடைய சொற்கள், பிறர் கேட்பது போலவும், ஒரு மனிதன் இறந்த பிறகு, அவனுடைய செய்கையும், குணாகுணங்களும் பிறரிடம் தோன்றுகின்றனவாம்! இதைத்தான் புத்தர்கள் மறுபிறப்பு என்று வாதிக்கின்றார்கள். புத்தர்கள் கூறும் மறுபிறப்பைக் குறித்த வியாக்யானம், நமக்கு விளங்கவில்லை. வாத்தியார் சொல்லை மாணாக்கர் கேட்டால், அவருடைய சொல், மாணாக்கரிடம், மறுபிறப்பை அடைந்தது என்று சொல்வது யாருக்கும் விளங்காது. இதை மறுபிறப்பென்று யாரும் அழைப்பதில்லை. ஒரு படத்திலிருந்து பல காப்பிகள் எடுத்தால் அந்தப் படம் காப்பிபடங்களில் மறுபிறப்படைந்தது என்று சொல்வார் யாரும் இலர். இறந்தவனுக்கும், பிறந்தவனுக்கும் மறுபிறப்பில் ஒற்றுமை அதாவது அவன்தான் Identity என்று ஏற்படவேண்டும். இறந்தவன்தான், பிறந்தான் என்று ருசுப்படுத்தும்வரை மறுபிறப்பென்பது வெறுஞ்சொல்லேயொழிய வெறில்லை ஆனால் புத்தர்கள் இந்த வாதத்திற்கு ஒரு ஞாயம் சொல்கின்றார்கள். அதா

வது உயிருடன் இருக்கும்போதே ஒருவன் க்ஷணத்திற்கு க்ஷணம் மாறுவதால் அவன்தான் எந்தக்காலத்திலும் இருப்பதாகச்சொல்லமுடியாதே என்பார்கள். ஒருவன் க்ஷணத்திற்குச் க்ஷணம் மாறுவது வாஸ்தவந்தான். அவன் தேகம் மாறுவதைப்போல் அவன் செய்கைகளும் மாறுவதும் உண்மை. ஆனால் எந்த செய்கை அவன் இறந்தபோது வேறு உடலைப்பெறுவது என்று கேட்கின்றோம்? புத்தர்கள் மறு ஜனனவிஷயமாகக் கூறும் வாதம் (Sophistry) அதாவது குதர்க்க வாதமென்றே கூறல்வேண்டும், மறுஜனனம் என்ற கற்பிதம் புராதன கற்பிதமாகும். காட்டுமிராண்டிகளிடம் இந்த கற்பனையைக் காணலாம். இறந்த பிறகு தங்கள் உயிர் மலையிலும், காட்டிலும், செடியிலும், நீரிலும் தங்கி ஆடுவயிற்றிலோ மாடுவயிற்றிலோ, புலிவயிற்றிலோ, அல்லது சிங்கம் வயிற்றிலோ இன்னும் பல் சீவன் வயிற்றிலோ பிறக்குமென்று காட்டுமிராண்டிகள் (Savages) நம்பி வருகின்றார்கள் இந்துக்களும் அதேமாதிரியாகவே தங்கள் உயிர் மறுபடியும் பிறப்பதாக எண்ணி வருகின்றனர். புத்தரும் தான்முன்ஜன்மத்தில்பட்சியாகவோ, மிருகமாகவோ இன்னும்பல உயிர்களாகவோ பிறந்து பிறந்து கடைசியில் புத்தராகப்பிறந்தார் என்று கூறியுள்ள கதைகளைப்படிக்கலாம். இது பழைமையான கற்பனை என்றோம். ஆனால் நமது நாட்டில் தற்கால புதிய புத்தர்கள் இந்த புராதன புத்தகோட்பாட்டை ஒரு போக்காக வியாக்கியானம் செய்கின்றார்கள். அப்படித்தெரியாத வொன்றை தெரிந்ததுபோல் பாசாங்கு செய்வதைவிட புத்தர்கள் நம்பும் புனர் ஜனனத்திற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. இதுவும் மற்ற கற்பனைகளைப்போன்ற கற்பனை என்று உண்மையை சொல்லிவிடுவதுதான் நமது யோக்கிய பொருப்பாகும். இந்தக் காலத்தில் பழைய சாராயத்தை புதிய புட்டியில் ஊத்துவதால் பாமர மக்களை வஞ்சிப்பதாகுமேயொழிய அவர்களுக்கு உண்மையை விளங்க வைப்பதாகாது.

சில அறிஞர்களும் மதக் கற்பனைகளாகிய கடவுள், ஆன்மா, புனர் ஜனனம், கர்மம், மோட்சம், நரகம், நிர்வாணம், ஆதிபாவம், பிரார்த்தனை, பலி, பில்லி, சூன்யம், மந்திர தந்திரம் முதலிய மூடமதக்கோட்பாடுகளை பொய்யென்று கண்டும் பழக்க வாசனையாலும் பயங்கொள்ளித்தனத்தாலும் இந்தக்கற்பனைகளை நம்புவதுபோல் நடித்து வருகின்றார்கள். இந்த மோசத்தால்தான் பாமர மக்களும் இந்த சொற்களை பண்டைக்காலமுதல் எதார்த்தப் பொருளென மதித்து மதிமயங்குகின்றார்கள். உள்ளதை உள்ளபடி உரைக்க அறிஞர்கள் மயங்கும்வரை உலகம் காட்டுமிராண்டித்தன்மையிலேயே இருந்துவருமென அறிக.

மறு பிறப்பின் ஆபாசம் இவ்வாறு இருக்கப் புத்தகங்கள் கூறும் நிர்வாணப்பதவி என்றால் என்ன? நிர்வாணமென்பது சமஸ்கிருத வார்த்தை, பாலி பாஷையில் நிப்பாண (Nibbana) என்று வழங்குவார்கள். ஆதியில் (Originally) நிர்வாணமென்றால், அவிந்து போவதென்று பொருள். எரியும் தீபம் (Fire) அவிந்து போவதுபோல் மனிதனும் அவிந்து போகின்றான். என்ற கருத்தைவிளக்க நிர்வாணமென்ற சொல்லை புத்தர்கள் உபயோகித்ததாகத்தெரிகிறது. ஆனால் கால அளவில் இந்த சொல்லை பல பொருள்பட உபயோகிக்கப்பட்டு வருகின்றது. கௌதம புத்தர் இந்த சொல்லுக்கு எந்த பொருள் கொடுத்தார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. சாமான்யமாக புத்த கூட்டத்தார் இதுவொரு மோட்ச உலகமென்று எண்ணுகிறார்கள், சத்தர்ம புண்டரீகம் (Saddharma Pundarika) என்ற நூலில் நிர்வாண மடைந்தோர் துசிதலோகத்திற்கு லாக்கியானவர் என்று கூறியுள்ளது. சில புத்த நூல்களில் ராக, துவேஷ, போகங்களை ஒழிப்பதே நிர்வாணமென்று கூறப்பட்டுள்ளது. இன்னுஞ் சில நூல்களில் தான, சீல, சமாதி மூன்றையும் தசசீலத்தையும், அஷ்டாங்க மார்க்கத்தையும் கையாடினவர்கள் நிர்வாணத்திற்குத்தகுதி என்று சொல்லப்படுகிறது. கௌதம புத்தர் இந்த பிறப்பிலேயே நிர்வாணத்தை அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. சிலர் நிர்வாணமென்றால் இறந்து போவதென்றும் சொல்லுகின்றார்கள். இதை பரி நிர்வாணமென்று கூறுவர். புத்த நூல்களில் அந்தந்த சமயத்திற்கு ஒத்தவாறு நிர்வாணத்திற்கு அர்த்தம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. உண்மையாகவே இது நமக்கு விளங்கவில்லை. வேதாந்திகள் தங்கள் பூர்ண நிலையை (Summum Bonum] சீவன் முக்தி என்று சொல்லுகிறார்கள். புத்தர்களும் தங்கள் பூர்ணநிலையை நிர்வாணம் என்கிறார்கள். இரண்டு நிலையும் இந்த ஜன்மத்தில் அடையக் கூடுமாம். ஆனால் வேதாந்தத்தில் தனது 'ஆன்மா' சீவன் முக்தி நிலையை அடைவதாகவும் புத்தர்கள் அநாத்ம நிலையே நிர்வாணமென்கிறார்கள் போலும். ஆனால் நமக்கு 'சீவன் முக்தியும்' 'நிர்வாணமும்' இரண்டும் மூடநம்பிக்கைகளென தோன்றுகின்றன.





Dr, R. M. Shastry's

# Ayurvedic Golden Tonic.

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

(Registered by the Government of India)

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

இதை ஆண், பெண், பாலர், விருத்தர் முதல் எல்லாவயதோரும் எவ்வித பத்தியமும், அனுபானமுமின்றி கீழ்க்குறிப்பிட்டரோகங்களால் கஷ்டப்படுகிறவர்களும் அல்லது தேகபலத்தையே விரும்புகிறவர்களும் இதை எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

இதனால்—பாண்டு, காமாலை, உடலில்போதிய ரத்தமின்மை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குன்மக்கட்டி, சூலை நோய், இருதய அதர்ச்சி, கழுத்திழுப்பு, கைகால் வலி, அல்லது சோர்வு உண்டாதல், மாதவிடாய்காலத்தில் உண்டாகும் தலைவலி, தலை பாரம், தலை மயக்கம், தலை சுற்றல், இடுப்புவலி, மார்புநோய், வயிற்றுவலி, மற்றும் கை கால் மூட்டுகளில் உண்டாகும் வீக்கம் முதலிய பல கஷ்டங்களை நிவர்த்திப்பதில் இது ஒப்பற்ற சஞ்சீவிக்கு ஒப்பானது.

மற்றும்—மூத்திரம் கள்ளைப்போலும், மோரைப்போலும், முரிந்தபால் போலும், பலவித நிறங்களாகவும் அடிக்கடிபோதல் மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது இரத்தம் போதல், பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல் முதலியவற்றை நிவர்த்தித்து இரத்த சுத்தியை உண்டாக்கி தேகத்திற்கு நல்ல பலத்தையும், தேக புஷ்டியையும் தருவதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

உண்மையில் நடக்க சக்தியற்றவர்களும் பரீட்சைக்காக இதில் ஒரு புட்டியாகிலும் உபயோகித்துப்பார்ப்பார்களானால் உண்மையில் அவர்களின் ஊன்றுகோலை வீசியெரிந்துவிட்டு தாமகவே நடக்கச்சக்தி பெறுவர் என்று உறுதியோடு இதை சிபார்சு செய்கிறோம்.

12 அவுன்சு புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0 போஸ்டு சிலவு கட்டுக்கூலி பிரத்தியேகம்.

விலாசம்:— Dr. R. M. Shastry

Post-Rakah Mines

Singhbum Dist. (N. India.)

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—C |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.


## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## Goshaye office pillss.
### கோஷாயி ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
T. K. V.
Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(கால்ராபைரி) கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.


கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.


## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

### கெற்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்ப் பஹிஷ்டையாகும், கர்ப்பாசயம்; சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக்
### இனாம்!
சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன.
விபரத்திற்கு எழுதுங்கள்.

### ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்தினாலும், உஷ்ணத்தினாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிறுத்தி தேகத்திடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

## மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழநி. S. I.



**ANANGARANGABATIKA.**
*(Enjoyment Pill)*
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
***Chandanpur,***
**(Khulna) E. B. R.**

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மனுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0,

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமைய்யாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.